பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

★ விலை ரூபா 1.25

# ஈழநாடு
THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

— வெள்ளி விழா ஆண்டு —

மலர் 85 மார்கழி 27 ரபி. ஆகி 7 இதழ் 330
யாழ்ப்பாணம் புதன்கிழமை 11-1-84

# கூட்டணித் தலைவர்களுடன் ஜே. ஆர். அளவளாவினர்

(நமது நிருபர்)

நேற்று ஆரம்பமான சர்வ கட்சி மாநாட்டில் மாநாட்டுப் பிரதிநிதிகளை மிகவும் கவர்ந்தது, கூட்டணி—ஜனாதிபதி சந்திப்புத்தான்.

தமிழர் பிரச்னை சம்பந்தமான இம்மாநாடு நேற்றுக் காலை பத்து மணிக்கு ஆரம்பமானது.

தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரதிநிதிகளும், தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகளும் குறிப்பிட்ட நேரத்திற்கு மாநாட்டு மண்டபத்துக்குச் சென்றுவிட்டனர்.

இவர்கள் மாநாட்டு மண்டபத்துக்கு முன்பாக உள்ள சிறிய மண்டபத்தில் அளவளாவிக்கொண்டிருந்தனர்.

சில நிமிடங்கள் தாமதித்து அங்கு வந்துசேர்ந்த ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா கூட்டணித் தலைவர்களைச் சந்தித்தார்.

"நீண்ட இடைவெளிக்குப் பின்னர் ஏற்படும் சந்திப்பு" என்று கூறி சில நிமிடங்கள் மனம்விட்டு அளவளாவினர்.

★ நேற்றைய மாநாட்டில் திடீர் திருப்பம்:

# ஸ்ரீ ல. சுதந்திரக்கட்சி கலந்து கொள்ள நேற்றிரவு முடிவு

# ம. ஐ. மு. இன்று தீர்மானிக்கும்

## பௌத்த சங்கங்களுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டது

(இ. கந்தசாமி)

தமிழர் பிரச்னை சம்பந்தமான சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொள்வதில்லை என்று நேற்று முன்தினம் திடீர் முடிவுசெய்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி நேற்றுத் தனது நிலையை மாற்றிக் கொண்டு, மாநாட்டில் கலந்துகொள்வது என்று தீர்மானித்துள்ளது! அதே நேரத்தில், மாநாட்டில் கலந்து கொள்வதா இல்லையா என்பதுபற்றி மக்கள் ஐக்கிய முன்னணி இன்று பகல் இறுதி முடிவு செய்யும்.

தமிழ் மக்களின் பிரச்னைக்கு தீர்வுகாண நேற்று ஆரம்பமான சர்வகட்சி மாநாடு 45 நிமிட நேரத்தில் முடிவுற்று இன்று மாலை 4-30 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

நாட்டின் தேசிய நலன் கருதி நடைபெறும் இந்த மாநாட்டில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி. மக்கள் ஐக்கிய முன்னணி ஆகிய இரு கட்சிகளையும் அழைப்பதென ஏகமனதாக மாநாடு தீர்மானித்தது. இவர்கள் கலந்துகொள்வதற்கு வசதியாகவே இன்று மாலை வரை ஒத்திவைக்கப்பட்டது.

மாநாடு நடைபெறும் தினங்களில் செய்தி அறிக்கை வெளியிடுவது என்றும் மாநாடு தீர்மானித்ததைத் தொடர்ந்து நேற்று வெளியிடப்பட்ட செய்தி அறிக்கையில் மேற்கண்ட விபரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பௌத்த சங்கங்களுக்கு அழைப்பு

மகா சங்கம், சிங்கள சங்கங்கள், முஸ்லிம் பேரவை என்பவற்றிற்கும் ஏற்கனவே அழைப்பு விடுத்துள்ளதாக மாநாட்டில் ஜனாதிபதி தெரிவித்ததாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினமும் செய்தி அறிக்கை வெளியிடுவதென்றும், அந்த அறிக்கையைத் தயாரிக்க குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டதாகவும் அக்குழுவுக்கு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி, திரு. பீற்றர் கெனமன், திரு. மு. சிவசிதம்பரம், திரு. பேர்னூட் சொய்சா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாநாட்டில் செய்தி சேகரிக்க பத்திரிகையாளர்கள் எவரும் அனுமதிக்கப்படவில்லை. படப்பிடிப்பாளர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டனர்.

### சிறிது நேரம் பரபரப்பு

நேற்றுக் காலை பத்துமணிக்கு ஆரம்பமாகவிருந்த மாநாடு 10-10 மணிக்கே ஆரம்பமானது. 10-07 வரை லங்கா சம சமாஜக்கட்சி பிரதிநிதிகள் எவரும் மாநாட்டு மண்டபத்துக்கு வந்து சேராததால், சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. அவர்கள் 10-08க்கு வந்து சேர்ந்தனர்.

சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொள்ள நேற்று முதலில் வந்து சேர்ந்தவர் ஐக்கிய தேசியக்கட்சியைச் சேர்ந்த பிரதிநிதி டாக்டர் எம். வி. எம். ஜலீல்

### ஜப்பான் பிக்குமார் பிரார்த்தனை

மாநாட்டு மண்டபத்தின் நுழைவாசலின் முன்பாக நான்கு ஜப்பானிய பிக்குகள் நேற்றுக்காலை 2 மணி நேரம் பிரார்த்தனையில் ஈடுபட்டனர். சர்வகட்சி மாநாடு வெற்றி பெற வேண்டுமென்பதே இவர்களது பிரார்த்தனையாகும்.

### மண்டப வளவில் பாதுகாப்பு

மாநாட்டு மண்டப வளவுக்குள் மூன்று தடைகள் அமைக்கப்பட்டு, கடும் பரிசோதனை நடத்தப்பட்டது. தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரதிநிதிகளும், தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகளும் பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் மண்டபத்துக்குவந்தனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், மக்கள் ஐக்கிய முன்னணியும் மாநாட்டில் நேற்றுகாலை கலந்துகொள்ளவில்லை. 10-10க்குஆரம்பமான மாநாடு10-55 மணிக்குமுடிவடைந்தது.

### ஒரே ஒரு பெண் பிரதிநிதி

காலஞ்சென்ற வவுனியா ஐ. தே. கட்சி அமைப்பாளர் திரு. புலேந்திரனின் பாரியார் திருமதி புலேந்திரன் மாநாட்டில் கலந்துகொண்ட ஒரே ஒரு பெண்மணி. ஐக்கிய தேசியக் கட்சிப் பிரதிநிதியாக இவர் கலந்துகொண்டார். இவர் இளம் பச்சை நிற சாறி அணிந்திருந்தார்.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுடன் சர்வகட்சி மாநாடாக நடக்கவிருந்த இம்மாநாடு பௌத்த மத ஸ்தாபனங்களும் கலந்துகொள்வதால் வட்டமேசை மாநாடாக மாறிவிட்டதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

மகாசங்கத்தின் சார்பில் அஸ்கிரிய பீடாதிபதி வண. பலிப்பானந்த தேரோ சிங்கள சங்கங்களின் சார்பில் திரு. அல்பேட் எதிரிசிங்கா ஆகியோர் கலந்துகொள்வார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

### முஸ்லிம் பேரவையில் 'மோதல்'

முஸ்லிம் பேரவையில் மாநாட்டுப் பிரதிநிதியைத் தெரிவுசெய்வதில் ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாட்டைத்

(8ம் பக்கம் பார்க்க)



# உண்ணாவிரதப் போராட்டம் தீவிரமடைகிறது!

## சாகும்வரை உண்ணாவிரதத்தில் மேலும் 2 மாணவிகள்

(ஏ. வி. மாணிக்கம்)

இடம் பெயர்ந்த பல்கலைக் கழகத்தமிழ் மாணவர்கள் ஏழு பேர் மேற்கொண்டுள்ள சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை கண்கலங்கப் பார்த்துக் கொண்டிருந்த மாணவ - மாணவிகள் குழாத்திலிருந்து மேலும் இரு மாணவிகள் உணர்ச்சி மேலீட்டினால் வீறு கொண்டு தாங்களும் சாகும்வரை உண்ணாவிரதமிருக்கப் போவதாகக் கூறி மேடைமீது தாவிக் கொண்டனர்.

நேற்றுக்காலை சாகும்வரை உண்ணாவிரதத்தில் குதித்த மாணவிகள் யாழ். பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தவர்கள்.

கடந்த திங்கட்கிழமை காலை இடம் பெயர்ந்த ஐந்து மாணவர்கள் இரண்டுமாணவிகளுடன் நேற்று இரண்டாம்

(8-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

குரும்பசிட்டி அரசடி வீதியிலுள்ள கிணற்றுடன் கூடிய, தற்போது விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வரும் பிரவியப்புலம் என்ற 11 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. செ. விக்கினேஸ்வரன், குரும்பசிட்டி, தெல்லிப்பழை 040

நல்ல நிலையில் உள்ள இசுசுரூஸா மினிபஸ் 6 சிலிண்டர்) E. L. F. 150 பிரயாணிகள் வான். பிரன்ஸ் வசதியுடன் விற்பனைக்குண்டு செ. தர்மலிங்கம் மண்கும்பான் மேற்கு 063

கூடுதல் பயன்தரக்கூடிய நல்ல இன கறித்தென்னம் பிள்ளைகள் (Hybrds) விற்பனைக்கு உண்டு. மில்க்வைற்-யாழ்ப்பாணம். 030

தடுப்புமருந்து கொடுக்கப்பட்ட 6 கிழமை கோழிக்குஞ்சுகள் [Babcock] விற்பனைக்குண்டு. விலை ரூபா. 22/-முன் கூட்டியேஓடர்கொடுக்க வேண்டும். தொடர்பு: நிக்கலின் பாம் அன்ட் இன்டஸ்ரீஸ், மிருசுவில். 081

75சிசி லம்ப்ரெட்டா ஸ்கூட்டர் உடன் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்க இல. 113, பருத்தித்துறை வீதி, நல்லூர். யாழ்ப்பாணம், 074

வீட்டுத்தளபாடங்கள், அழகான செற்றிகள் கண்ணாடி அலுமாரிகள். றெசிங் ரேபிள், சாப்பாட்டறை மேசை ஆகியன விற்பனைக்குண்டு உடன் தொடர்புகொள்ளவும். 16/1 1வது ஒழுங்கை, ரெம்பிள் ரோட், யாழ்ப்பாணம் 071

இணுவில் மானிப்பாய் பிரதானவீதியில் வியாபார கேந்திரஸ்தானமாகவும் நாற்சந்தியாயும் அமைந்த காணிவிற்பனைக்குண்டு. தொடர்பு: க. தம்பிராசா T.M.R. தொழில் நிலையம் தம்பிரதிினை மகால் சுதுமலை வடக்கு, மானிப்பாய். 067

பளையிலுள்ள 10 ஏக்கர் தென்னந்தோட்டம், 3 ஏக்கர் வயல், 1 ஏக்கர் தோட்டக் காணி (மாமரம்), பெரிய கிணற்றுடன்விற்பனைக்குண்டு தொடர்பு அன்ரன் ஜெயவேந்திரா 34, கண்டிரோட், மிருசுவில் 050

யப்பானிலிருந்து புனரமைக்கப்பட்டதும், புதியவையும் கார், டிரக், பஸ், வான் நேரடியாக ஆடர்களுக்கு இறக்குமதி செய்து கொடுக்கிறோம். உடன் தேவைகளுக்கு கையிருப்பில் உண்டு. விபரங்களுக்கு: நா. சாம்பசிவம் அன் கோ, யாழ்ப்பாணம். T P. 22454, பிரன்ஸ் ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும். 046

## தேவை

வியாபாரக் கணக்கு எழுதுவதில் நல்ல அனுபவம் பெற்றவரும், வீடியோ ஸ்தாபனத்தில் பொறுப்புடனும் கடமையுணர்ச்சியுடனும் வேலைசெய்யும தகுதி வாய்ந்த ஒருவர் உடன் தேவை. வீடியோ கிளப்பில் வேலைசெய்து அனுபவம் பெற்றவர்கள் விசேஷ தகைமையுள்ளவர்களாகக் கருதப்படுவர்: பிணைப்பணம் எதிர்பார்க்கப்படும். சான்றிதழ்களுடன் கடிதமூலம் விண்ணப்பிக்கவும். திரு. ம. கணபதிப்பிள்ளை, 87/12, 1ம் ஒழுங்கை, பிறவுண்வீதி. யாழ்ப்பாணம் 057

## தேவை

பரந்தன் சந்தி கமத்தில் நல்ல தொழிலாளி அவசியம். உடனே பரந்தன் கரைச்சி வடக்கு பன்முக சங்க இரும்புக் கடை கணேசநாதனுடன் தொடர்பு கொள்ளவும். 073

## சேவை

நீர்வேலி வடக்கிலிருந்து பலாலிவீதி ஊடாக யாழ்ப்பாணப் பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவ, மாணவிகளுக்கு புதிய மினிபஸ் சேவை நடைபெறவுள்ளது. தொடர்பு கொள்ளவும்: T. தியாகராசா, நீர்வேலி வடக்கு, மாசிவன் சந்தி, நீர்வேலி. 065

நீலப்பிரதி (Blue print)க்கு யாழ்நகரில் சிறந்த ஒரேஇடம். ''கிறபிக் டிசைனர்ஸ்'' 9/2, ஸ்ரான்லி வீதி (பரமேஸ் கோணேஸ் கட்டிடம்) யாழ்ப்பாணம். பெரிய Plan களுக்கும் Copy ஒரே தாளில் எடுத்துக் கொடுக்கப்படும். இரவு பகல் சேவை. Phone: 22053. 10953

## தவறிவிட்டது

சுன்னாகம் இலங்கை வங்கிக்கும் பெற்றோல் விநியோகிக்கும் நிலையத்திற்கும் இடையில் விலாசமிடப்பட்ட வெள்ளை என்வலப்பினுள் வைக்கப்பட்டிருந்த மூன்று கலர் பிலிம் நெகரிவ் (Coloured Film Negatives) தவறிவிட்டது கண்டெடுப்போர் தகவல் தரவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். A. T. பொன்னுத்துரை குரும்பசிட்டி, தெல்லிப்பழை. 084

3-1-84ல் கொழும்பு - யாழ். கல்யாணிபஸ்ஸில் எனது விமானச்சீட்டு (கொழும்பு - சிங்கப்பூர் U T A.), அடையாள அட்டை (620360309X), கடவுச்சீட்டு கவருடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தயவு செய்து தகவல் தரவும் அல்லது ஒப்படைக்கவும். தர்மலிங்கம் ஞானேஸ்வரன், கோண்டாவில மேற்கு. தகுந்த சன்மானம் வழங்கப்படும். 069

## கமிஷனுக்கு

கமிஷனுக்கு / பிஸ்மாத்தி கொடுப்பதற்கு யாழ். மாநகர சபை எல்லைக்கு அண்மையில் நல்கு வியாபாரம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சைவ கோட்டல் சகல வசதிகளுடன் உண்டு இரண்டாகப் பிரித்து ஒன்று கோட்டலாகவும் மற்றயதில் வேறு வியாபாரமும் செய்யக் கூடிய வசதியுண்டு, தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி 57 (195) காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 035

## பயிற்சி

ஒருமாத வெல்டிங், வயரிங், மோட்டார் மெக்கானிசம் வகுப்புகள் ஆரம்பமாகின்றன பயிற்சி முடிவில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழைப் பெறுவதோடு வீடு, வர்த்தக தொழில்நிறுவனங்களுக்கு நீங்கள்சுயமாகவே வயரிங்செய்யும் தகைமையையும் பெறுவீர்கள். J E C. 3, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 076

மாலைநேர எலக்றிக்கல் வயறிங் - ஓட்டோ வயறிங் இரண்டுமாத பயிற்சிகள் 16-1-1984 ல் ஆரம்பமாகின்றன. இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னொலொஜி, 11 B, மொம்சாக் கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 087

## சோதிடம்

பிரபல சோதிடர் Prof. K. நடராஜா ஜே. பி.யை 'லிங்ககிரி' அளவெட்டி (தபாற் கந்தோருக்கு எதிரில்) என்ற முகவரியில் தற்போது தொடர்பு கொள்ளலாம். 08

## FOR SALE

We are Marketing the following consumer products throughout our dealers in the Northern and Eastern provinces 'Cleanall'-disinfectant, 'killsall-' insects powder, 'Bingo'- cleaning powder, ''Bleaching powder'', ''Home Garden''- fertiliser. Jayanthi Enterprises, Agents and Distributors, Avarankal puttur (p. o.) 079

## WANTED

Steward Receptionist Vacancy Exists for the above post inthe YarlChinese Restaurant Applicants should be males, around or below thirty years of age and fluent in English. Kindly be present for an interview with the original certificates, etc., at 2-30 p. m on any day. Yarl Chinese Restaurant, 124, R. R. Nalliah Road, Jaffna. 070

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி பட்டண எல்லைக்குள் கண்டிரோட்டில் கட்டிடத்துடன் 4 பரப்புக் காணி. வியாபாரம்/தொழிற்துறைக்கு ஏற்றது.

P. தேவேந்திரன்
கச்சாய் ரோட்,
சாவகச்சேரி.
066

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரைவுள்ளது)

## வெற்றுச்சாக்கு கேள்வி அறிவித்தல்

எமது சங்கத்தில் 3000வெற்றுச்சாக்குகள் கேள்வி மூலம் விற்பனைக்குண்டு.

முடிவுத் திகதி; 17-1-84.

பதில்

பொது முகாமையாளர்,
127, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
9-1-84.
091

பருத்தித்துறை
ப. நோ. கூ. சங்கம் (வ/து)

## ஏல விற்பனை வெற்றுச் சாக்கு

பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கத்தின் களஞ்சியத்திலிருக்கும் சுமார் 10,000 வெற்றுச் சாக்குகள் இன வாரியாக எதிர்வரும் 25-01-84 புதன்கிழமை காலை 10-00 மணிக்கு களஞ்சியத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்

ஏலக்கூற்றில் வெற்றிபெறுவோர், ஏலத்தில் பெற்ற பொருட்பெறுமதியை உடனே சங்கக் காரியாலயத்தில் கட்டி ரசீது பெற்று தமக்குரிய பொருட்களை உடன் ஏற்றிச் செல்லுதல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்,
பரு. ப. நோ. கூ. சங்கம்.
பருத்தித்துறை,
1984-01-09. 088

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில்

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற பொன்னையா சங்கரப்பிள்ளை என்பவரது மரண சாதன விடயத்தில்.

மரணமெய்தியவர்

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி பொன்னம்பலம்

மனுதார்.

மரணசாதன
நியாயாதிக்கம்
இல. 212

எதிராக

1. இராமலிங்கம் சிதம்பரப்பிள்ளை - நீர்வேலி வடக்கு, நீர்வேலி.
2. சின்னத்தம்பி பொன்னம்பலம் பெண் செல்லம்மா மட்டுவில் வடக்கு, மட்டுவில்.

எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1984-ம் ஆண்டு தை மாதம் 16ந் நாளன்று முற்பகல் 9-15 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுன தாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி
ஆ. குணநாயகம்,
பதிவாளர்,

1984ம் ஆண்டு தை மாதம் 3ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

என்னால் வரையப்பட்டது.
செ. இராமலிங்கம்,
மனுதாரின் சட்டத்தரணி
068

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த காலஞ்சென்ற வைத்திலிங்கம் செல்லத்துரை என்பவரின் மரண சாதனமில்லாத மரணச் சொத்துக்களின் விடயத்தில்,

மரணமெய்தியவர்

மரணசாதன )
நியாயாதிக்கம்) இல. ரி/174

வைத்திலிங்கம் கைம்பெண் மங்கையற்கரசி, ''துவாரகா'', கல்வளை ரோட், சண்டிலிப்பாய்.

மனுதார்

எதிராக

செல்லத்துரை ஞானனந்தா, நாவலர் ரோட். யாழ்ப்பாணம்.

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட மரணமெய்தியவரின் மரணச்சொத்துக்களை நிருபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடரப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளைபதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1984ம் ஆண்டு தை மாதம் 25ம் திகதி முற்பகல் 8-30 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்பாக தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனகட்டளையாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1983ம் ஆண்டு ஐப்பசி மாதம் 17ம் திகதி.

கோட்டுக்கட்டளைப்படி,

ஆழ்வார்
சிவபாதசுந்தரம்,
பதிவாளர்.

வரைவு:
க. குணரத்தினம்,
மனுதாரின் சட்டத்தரணி.
10977

## NEW BEACON Study Centre

(ஸ்ரீதர் முன்பாக)
ஸ்ரான்லி ரோட் - யாழ்ப்பாணம்.

புதிய வாரநாள் பகல் நேர வகுப்புகள்

(A/L) 1984 2ம் பிரிவு ஆரம்பம்
12-01-84 (வியாழன்)

| | | |
|---|---|---|
| 12-30 | இரசாயனம் | திரு. வரதன் B. Sc. |
| 1-30 | பௌதிகம் | ,, விமல்ராஜ் |
| 2-30 | தாவரவியல் | ,, தயாபரன் |
| 3-30 | விலங்கியல் | ,, குணசீலன் |
| 3-30 | பிரயோககணிதம் | A. பத்மநாதன் and சற்குணராஜ் |
| 4-30 | தூயகணிதம் | A. பத்மநாதன் and சற்குணராஜ் |

சனி - ஞாயிறு — 2-30—3-30
தாவரவியல் — சிவவீரசிங்கம்

051

## UNIFO-யூனிபோ

பொங்கல் மலிவு விற்பனை
16-1-84 வரை
பலாலிவீதி உரும்பிராயில்

★ உருக்கு அலுமாரி, கபேட், கபினெட், மேசை.
★ இரும்புக் கதிரைகள், 'பேப்பர்ருக்' 'இச்சன்ருக்'.
★ மரத்தளபாடங்கள், கட்டில் கதிரை, மேசை.
★ அறுத்த மரங்கள், தீராந்திகள் பனைமரம், கதவு, நிலை யன்னல்கள்.
★ இரும்பு கேற் கிறீல்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

## ஐக்கிய குடும்பங்கள் கைத்தொழில் நிறுவனம்

(இது ஓர் அரச அங்கீகாரம் பெற்ற உற்பத்தி நிறுவனம்)

# "இலங்கையை அணிசேரா இயக்கத்திலிருந்து அமெரிக்கா விலகச் செய்கிறது!"

## சோவியத் பத்திரிகை குற்றச்சாட்டு!

### இந்தியாவின் அணிசேரா போக்குக்குப் பாராட்டு!

மாஸ்கோ, ஜன. 10

"இலங்கையை அணிசேரா இயக்கத்திலிருந்தும் விலகச்செய்ய அமெரிக்கா முயன்றுவருகின்றது" என்று சோவியத் யூனியனின் பத்திரிகையொன்று அதன் கட்டுரையொன்றில் குறிப்பிட்டுள்ளது.

இந்துசமுத்திரத்தில் இராணுவ நடமாட்டம் அதிகரித்து வருவது குறித்தே அக் கட்டுரை எழுதப்பட்டுள்ளது. "இந்துசமுத்திரம் அணுசக்தி ஏரியாக மாறும் நிலை ஏற்படுகிறது" என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அக் கட்டுரையில் இடம்பெறுவதாவது:

இலங்கையை அணிசேரா கொள்கைகளிலிருந்தும் விலகிச் செல்லும் விதத்தில் அமெரிக்கா அதனை வழிநடத்த முயல்கிறது இது குறித்து இந்துசமுத்திர கரையோர நாடுகள் விழிப்பாக இருக்க வேண்டும்.

இந்துசமுத்திரத்தில் அணுசக்தி ஏவுகணைகளையும் நாசகாரிக் கப்பல்களையும் அமெரிக்கா நாளுக்கு நாள் அதிகரித்துவருகின்றது. தியாகோகாஸியா தீவு இந்துசமுத்திரத்தில் ஒரு அமெரிக்கத் தளமாக இயங்குகிறது இங்கு பெருமளவு அணுசக்தி ஆயுதங்கள் குவிக்கப்பட்டுள்ளன.

பாகிஸ்தானுக்கும் அமெரிக்கா நவீன போர் ஆயுதங்களை பெருமளவு விநியோகித்துவருகின்றது. இதனால் இந்தியா அச்சுறுத்தப்படுகின்றது.

இந்துசமுத்திர பிராந்தியத்தில் இராணுவ நடமாட்டமும் வல்லரசுகளின் கெடுபிடிகளும் நாளுக்கு நாள் அதிகரித்துவருகின்றன. இருப்பினும் இந்தியா மண்டல சார்பற்ற கொள்கையில் உறுதியாக இருந்து அணிசேரா இயக்கத்தை வழிநடத்துவது பாராட்டுக்குரியது.

இவ்வாறு சோவியத்தின் அப் பத்திரிகைக் கட்டுரையில் இந்துசமுத்திர அரசியல் நிலவரம் பற்றி எழுதப்பட்டுள்ளது. (கி)

## தமிழ்நாடு சென்றனர்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பரந்தன் ரோட்டறிக் கழகத்தின் உறுப்பினர்கள் சென்னையில் நடைபெறும் கவர்னர் கூட்டத்தில் கலந்துகொள்ளும் முகமாகத் தமிழ்நாடு சென்றுள்ளனர்.

பிரஸ்தாப கழகத் தலைவர் டாக்டர் என். சிறீதரன் தலைமையில் சென்றுள்ள இக்குழுவில் முன்னாள் தலைவர்களான ஆ. குலசேகரம்பிள்ளை, வி. ரி சிவலிங்கம், செடலாளர் பா. வை. ஜெயபாலன் ஆகியோர் உட்படப் பலர் சென்றுள்ளனர்.

## சீனப்பிரதமர் - அமெரிக்க அதிபர் சந்திப்பு!

வாஷிங்டன், ஜன. 10

சீனப் பிரதம மந்திரி திரு ஸாஓஸியாங் அமெரிக்கா வந்துள்ளார். இவர் இன்று அமெரிக்க அதிபர் திரு ரெஹனல்ட் றீகனைச் சந்திக்கின்றார்.

திரு ஸாஓஸியாங் நான்கு வருடங்களின் பின்னர் அமெரிக்கா வந்துள்ள முதலாவது சீனத் தலைவராவார். 1979ம் ஆண்டு சீனத் தலைவர் டென்ஸியாவோ பெங் அமெரிக்காவுக்கு வந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது,

தென் ஆசிய விவகாரம், இராணுவ நடவடிக்கைகள் ஆயுதப் பரிகரணம், அணு ஆயுத உற்பத்தி, தொழில் நுட்பங்கள் ஆகியனபற்றி சீனப் பிரதமரும், அமெரிக்கத் தலைவரும் உரையாடுவார்கள் என்று கூறப்பட்டது.

வாஷிங்டனுக்கு அருகில் உள்ள 'அன்ட்ரூ' விமானப் படைத் தளத்தில் சீனப் பிரதமர் நேற்று முன்தினம் வந்திறங்கினார். அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஜோர்ஜ் ஷுல்ஸ் அவரை அங்கு வரவேற்றார்.

சீனப் பிரதமர் அமெரிக்காவில் முக்கிய உல்லாசப் பயண இடங்களையும் பார்வையிடுவார். (கி)

## 6 ராணுவ வீரர்கள் மீது கொலைக் குற்றச்சாட்டு

### ஜன. 30-ல் விசாரணை

[திருகோணமலை]

திருகோணமலைப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த ஒரு கான்ஸ்டபிளைச் சுட்டுக்கொலை செய்ததாக ஆறு இராணுவ வீரர்கள் மீது சி ஐ டி. பொலிஸார் தொடர்ந்துள்ள வழக்கு விசாரணை திருகோணமலை நீதவான் நீதிமன்றத்தில் ஜனவரி 30-ல் ஆரம்பமாக உள்ளது.

திருகோணமலை நீதவான் ஹேமா சேனரத்ன முன்னிலையில் ஆறு இராணுவ வீரர்களுக்கு எதிரான குற்றப் பத்திரிகைகளை சி. ஐ. டி. பொலிஸ் உதவி சுப்ரின்டன் புண்ணிய டி. சில்வா தாக்கல் செய்தார். இந்த ஆறு இராணுவ வீரர்களும் நீதிமன்றத்தில் பிரசன்னமாக இருக்கவில்லை.

இவர்களைக் கைது செய்ய வாரண்ட் பிறப்பிக்கும் படி உதவி சுப்ரின்டன் நீதவானைக் கேட்டுக் கொண்டதைத் தொடர்ந்து நீதவான் எதிரிகளைக் கைது செய்ய வாரண்ட் பிறப்பித்தார்.

இந்த 6 இராணுவ வீரர்களும் திருமலை பிரட்ரிக் கோட்டைக்குள் முகாமிட்டு உள்ள ரஜரட்டரைபிள் ராணுவ அணியைச் சேர்ந்தவர்களாவர்.

கடந்த டிசம்பர் 25-ம் திகதி இரவு கோட்டைக்குள் சென்ற பொலிஸ் ஜீப் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் பொழுது திருகோணமலை பொலிஸைச் சேர்ந்த கான்ஸ்டபிள் செனவிரத்ன தர்மதாச காயமானர். இந்த ஆறு இராணுவ வீரர்கள் மீதும் கொலை முயற்சிக் குற்றச்சாட்டும் சுமத்தப்பட்டுள்ளது.

கான்ஸ்டபிள் ஜயதிஸ்ஸ என்பவரைக் கொலை செய்ய முயற்சித்தார்கள் என்பது இரண்டாவது குற்தச்சாட்டாகும்.

இவ்வழக்கு சம்பந்தமாக 35 தடயப் பொருட்கள் புதன்கிழமை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. 10 ரைபிள்கள் 2 ரிப்மீற்றர் ஷொட் கன்கள், எஸ் எம் ஜீ துப்பாக்கி ஆகியன இத்தடயப் பொருட்களில் அடங்குகின்றன. பொலிஸாரின் விண்ணப்பத்தின் பேரில் இத்தடயப் பொருட்களை அரசாங்க ரசாயனப் பரிசோதகரின் பரிசோதனைக்கு அனுப்பிவைக்கும்படி நீதவான் உத்தரவிட்டார்.

## பெய்ரூட்டில் பிரெஞ்சு நிலையம் மீது தாக்குதல்

### பாரசூட் வீரர் பலி

பெய்ரூட், ஜனவரி 10

பிரெஞ்சுத் துருப்புகள் நிலைகொண்டுள்ள பகுதியொன்றில் நேற்று இரு பயங்கர தாக்குதல்கள் நடத்தப்பட்டன. ஒரு பிரெஞ்சு பாரசூட் வீரர் இதில் கொல்லடபட்டார். வேறு இரு வீரர்கள் காயமடைந்தனர்.

முதலாவது தாக்குதலின் போதே இச் சேதங்கள் ஏற்பட்டன. இரண்டாவது தாக்குதலின்போது பிரெஞ்சுத் துருப்புக்களை நோக்கிவந்த டைனமைட் வெடி ஒன்று ஆகாயத்திலேயே வெடித்துவிட்டது என்று தெரிவிக்கப்பட்டது

கடந்த மாதம் 20ம் திகதி பிரெஞ்சுத் துருப்புகள் மீது பெய்ரூட்டில்தாக்குதலொன்று நடத்தப்பட்டது. அதன்பின்னர் இடம்பெற்ற புதிய தாக்குதல் இதுவென்று தெரிவிக்கப்பட்டது. கடந்த 20ம் திகதி இடம்பெற்ற தாக்குதலில் ஒரு பிரெஞ்சு வீரர் உட்பட பதின்மூன்று சாதாரண மக்கள் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரெஞ்சுத் துருப்புக்கள் பெய்ரூட்டில் அடிக்கடி தாக்குதல்களினால் பாதிப்படைவதுண்டு.

ஐ நா.சமாதானப்படைகளிலேயே இவை அங்கம்பெறுகின்றன. இப் படையில் அதிகளவு ஆட் சேதத்தை பெய்ரூட்டில் பெற்ற அணியாக பிரெஞ்சுத் துருப்புகள் விளங்குகின்றன இவற்றுடன் அமெரிக்கத் துருப்புகளும் சேதங்கள் பலவற்றைக்கொண்டுள்ளன.

இதேவேளை பிரெஞ்சு அரசாங்கம் பெய்ரூட்டிலிருந்தும் தனது படைப்பிரிவில் கணிசமானளவு பகுதியை வாபஸ் பெறப் போவதாக அறிவித்துள்ளது. [கி]

## மூன்றுநேர உணவாகப் பாண்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் உள்ள அகதிகள் முகாம் ஒன்றில் பாண் மூன்று நேரமும் உணவாக வழங்கப்படுவதாக புகார் தெரிவிக்கப்படுகிறது.

இம்முகாமில் வெளிநாட்டு நிறுவனம் ஒன்றினல் வழங்கப்பட்ட நிதிஉதவியுடன் அகதிகள் பாவனைக்காக கட்டப்பட்ட புதிய மலசல கூடங்களை இவர்கள் பாவனைக்கு விடப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

## ரூபவாஹினியில் இன்று

மாலை

| | |
|---|---|
| 6.00 | உங்கள் நாட்டைத் தெரிந்து கொள்ளுங்கள் [ஆங்கிலம்] |
| 6.05 | சிறுவர் நிகழ்ச்சி (ஆங்கிலம்) |
| 6.25 | சிறுவர் நிகழ்ச்சி (சிங்களம்) |
| 6.55 | செய்திகள் (தமிழ்) |
| 7.15 | கலை அரங்கம் (நாடகம்) |
| 7.45 | சிங்கள நிகழ்ச்சி |
| 8.15 | செய்திகள் (சிங்களம்) |
| 8.35 | "திமுத்துமுத்து" (நாடகம்) |
| 9.05 | நடுவாரத் தமிழ் திரைப்படம் |
| 9.30 | செய்திகள் (ஆங்கிலம்) |
| 9.50 | (திரைப்படத் தொடர்ச்சி) |
| 10.30 | உலகச் செய்தி தலைப்பங்கள் |
| 10.35 | (திரைப்படத் தொடர்ச்சி) |
| 11.30 | நிகழ்ச்சிகள் முடிவு. |

## பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

கீரிமலை சிவநெறிக் கழகத்தின் பொங்கல் விழாவும், ஆண்டு விழாவும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பண்டிதர் இ. நமசிவாயம் தலைமையில் நகுலேஸ்வரர் திருக்கோயில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் மல்லாகம் மாவட்ட நீதிபதி திரு. சீ. விக்னேஸ்வரன், பண்டிதர் இ. திருநாவுக்கரசு, வித்துவான் சி ஆறுமுகம், திரு.செ. முருகவேள், திரு. க. உமாமகேஸ்வரன், சிவஸ்ரீ கு. நகுலேஸ்வரக்குருக்கள் உட்பட பலர் உரையாற்றவுள்ளனர்.

## சிரமதானம்

(கிளிநொச்சி)

இம்மாதம் 18-ம் திகதி கிளிநொச்சி அரசினர் ஆஸ்பத்திரியில் சிரமதான வைபவம்ஒன்று இடம்பெறவுள்ளது. பல பொதுமன்றங்கள் கலந்து கொள்ளும் இவ் வைபவத்திற்கான ஏற்பாடுகளை ஆஸ்பத்திரி அபிவிருத்திச் சபையினர் மேற்கொண்டுள்ளனர்.

# ஆந்திரமுதல்வர்ராமராவ்மீது கொலை முயற்சி!

## கட்டைவிரல் காயத்துடன் உயிர் தப்பினார்

ஹைதராபாத், ஜன 10

ஆந்திரமாநிலமுதலமைச்சர் திரு.என். டி.ராமராவ் நேற்று கொலைமுயற்சி ஒன்றிலிருந்தும் உயிர்தப்பினார். ஹைதராபாத் லால்பகதூர் விளையாட்டரங்கிலேயே இக் கொலை முயற்சி இடம்பெற்றது.

ஆந்திர முதல்வர் திரு. ராமராவ், கலாசாரநிகழ்ச்சியொன்றில் கலந்துகொள்ள லால்பகதூர் ஸ்ரேடியத்துக்கு நேற்று மாலை வந்திருந்தார். அப்போது இளைஞன் ஒருவன் கத்தியொன்றை அவரை நோக்கி வீசினான். குறிதவறவே அக் கத்தி முதல்வர் ராமராவின் இடதுகை கட்டைவிரலிலேயே குத்தியது இதனால் சிறு வெட்டுக்காயம் மட்டுமே அவ்விரலில் ஏற்பட்டது.

கொலைமுயற்சியில இறங்கிய இளைஞன் உடனடியாகக் கைது செய்யப்பட்டான். அவனது வயது 25 ஆகும். பொலிசார் இச்சம்பவம் குறித்து தீவிர புலன் விசாரணைகளை நடத்துகின்றனர்.

திரு. என். டி. ராமராவ் கடந்த ஆண்டில் ஆந்திர மாநில முதல்வராக பெரும்பான்மை ஆதரவுடன் தெலுங்குதேசக்கட்சி சார்பில் தெரிவுசெய்யப்பட்டவர் சந்நியாசி வேடம் தரித்து ஆட்சி செய்ய விருப்பம் கொண்டு காவி உடையிலேயே இவர் நடமாடி வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது. (கி)

**மணிவாக்கு**

அறிவது பிரதானமல்ல; கற்பனைதான் பிரதானமானது.

— அனடோல் ப்ரான்ஸ்.

## நமது நோக்கு

### பட்டாசுப் பொங்கல்

வீட்டுப்பொங்கல், மாட்டுப் பொங்கல் பொங்கியே தீரவேண்டும், தை பிறந்ததும் இவ்விரு பண்டிகைகளும் எக்காரணம் பற்றியும் தடைபெறாது நடைபெறும்: ஆனால் தடல்புடல் தவிர்ப்பதே இன்று முக்கியம்.

எங்கள் நேற்றைய பத்திரிகையில் எழுதப்பட்ட கடிதம் இரண்டு இளைஞர்கள் இப்பகுதி மக்களுக்கு விடுத்த வேண்டுகோள்: அவர்கள் குறிப்பிட்ட கருத்து எம்மில் எவருக்கும் தெரியாததல்ல;

பட்டாசு, பயங்கரவெடிகள் போன்ற வாணவேடிக்கையில் லட்சக்கணக்கான ரூபாவை எரித்துக் கரியாக்கும் வழக்கத்தை இவர்கள் கண்டித்திருக்கிறார்கள். இவ்வருடம் இதனைக் கைவிடும்படி கேட்டிருக்கிறார்கள்: அதனை நாம் முழுமனதுடன் ஆதரிக்கின்றோம்.

இந்நாட்டில் வாழும் தமிழ்மக்கள் ஒரு சிறந்த சமூகம்; அன்றென்ன இன்றென்ன கல்விகேள்வியால், தெய்வபக்தியால், விருந்தோம்பலால், சூழவிருக்கும் சுற்றத்தாரின் அன்பால், சமூகமளாவிய நட்புநெறியால் எமது சமூகப் பண்பாடு ஸ்திரமான தன்மையது

இன்றைய வாழ்க்கை முறையில் ஏற்பட்ட மாற்றங்கள் பாரதூரமானவையானாலும், சமூகவேரறுவதற்கு ஏதுவான எந்தச் செயல்களையும் தமிழ் மக்கள் இலகுவில் அனுமதிக்க மாட்டார்கள்; இதற்குப் புறநடை மிகச்சிலரே

சாதிபேதம், சமயவேற்றுமை போன்ற குறைபாடுகளும் கிராமவாழ்க்கையிலே அதிகம் குறைந்து வருகின்றன.

இன்று எமது சமுதாயத்துக்கேற்பட்ட அரசியல், பொருளாதார சவால் எம்மை ஒற்றுமைப்படுத்துவதற்கு ஒரு அரியதருணமெனலாம்.

எனவே 10 வருடங்களுக்கு முன் யாழ்ப்பாணத்தில் நடந்த உலகத்தமிழ் மாநாட்டின் சிறப்பு வரலாற்றை மாசு படுத்திய 9 இளைஞர்களின் அகால மரணம் நேற்று மிக அமைதியாக நினைவு கூரப்பட்டது. இன்று வரைக்கும் எத்தனை பேர் இவ்வாறு உயிரிழந்தனர் சமூகத்துக்கு அண்மையில் ஏற்பட்ட அழிவு, இழிவு- இவையெல்லாம் மறக்கப்படவேண்டிய போதும், நாமொரு நாகரிகமான மக்கள் என்பதால் இவ்வருட பொங்கல் மிக அமைதியாக கொண்டாடப்படவேண்டியது. துன்பத்தில் பங்கு கொள்ளல் சமூக ஒற்றுமையின் முதன்மையான பண்பு.

மேலும் இன்று நடந்து கொண்டிருக்கும் மாநாடு வெற்றிபெறவேண்டுமென்று ஏழுலட்சம் தோட்டத் தொழிலாளர்கள் நாளை முழுநாளும் பிரார்த்தனையிலீடுபடுகின்றனர்.

இது மட்டுமா இடம்பெயர்ந்த ஏழு தமிழ்மாணவர்கள் சாகும்வரை உண்ணாவிரதத்தில் இறங்கியுள்ளனர். எனவே பட்டாசுக்கு இடமெங்கே?

எமது இடர்கள் அனைத்தும் நீங்க தை பிறக்கட்டும், வழியும் பிறக்கட்டுமென சூரிய பகவானுக்கு மிக அமைதியாக பொங்கலும் பூசையும் செய்வோம்.

### சட்டத்துக்குக் கட்டுப்பட்ட சமூகம்

பிரிட்டிஷ் மகாராணியின் மூன்றாவது புதல்வர் இளவரசர் எட்வேர்ட் தமது நண்பர்களுடன் மதுபான நிலையம் ஒன்றில் மது அருந்தக் கூடியிருந்தார். ஆனால் அந்த நேரம் விற்பனை இடைநிறுத்தப்பட்டிருந்தது; எனவே அவர்கள் கோரிக்கை மறுக்கப்பட்டது.

கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழக மாணவர்கள் இவர்கள்; அருகிலிருந்த பாரில் இவர்கள் இதனை எதிர்த்து கூச்சலிட்டதும், இளவரசர் உட்பட அனைவரும் உரிமையாளரால் வெளியே கலைக்கப்பட்டனர்

சம்பவத்தின் சுவை எங்கே? இளவரசரும் கூட்டத்தில் ஒருவரென்பதை கலைத்தவருக்குத் தெரியாது. ''தெரிந்திருந்தால் இன்னும் ஏறுக்குமாறாக ஏசிக் கலைத்திருப்பேன்'' என்றாராம்.

அதேபோல் நீதியரசர் ஒருவர்- பிரபு -மாஜிஸ்ரேட் நீதிமன்றத்தில், அவதானமில்லாது கார் ஓட்டியதற்காகக் குற்றவாளியாகக் காணப்பட்டதால், எழுபது ஸ்டேலிங் பவுண் அபராதமாகக் கட்டினார்.

இச் சம்பவத்தின் சுவை நீதியரசர் கொடுத்த விளக்கத்தில் காணப்படுகிறது. கடும் வேலை காரணமாக மனங்குழம்பியிருந்த நிலையில் இது நடந்துவிட்டதென்று அவலை தெரிவித்தார். நல்ல காலம் மோதுண்ட சிறுமி காயமின்றித் தப்பிவிட்டாள் என்றாராம்.

சட்டத்துக்கு முன் எல்லோரும் சமம்என்று நாமும் எங்கள் குடியரசில் சில சாதனைகள் நிகழ்த்தியுள்ளோம்.

ஆனால் அரச வம்சம் என்றால் நிலத்தில் காலில்லாமல், எங்கள் மனநிலை குலைந்துவிடுகிறது. அவர்கள் தெய்வப் பிறப்புக்கள் என்ற பழுத்து உழுத்த கொள்கை இன்னும் போவதாகக் காணவில்லை.

நீதியரசரின் கதை எங்கள் உயர்நீதிமன்றத்திலும், சில நீதியரசர்கள் வீட்டிலும் நடைபெற்ற 'விழாக்களுக்கு' சூடு கொடுக்குமா?

# 'யுனிசெவ்' திட்டத்தின் கீழ் பரவலான உதவிகள்

## புதிய திட்டங்களும் செயல்படும்

(யாழ்ப்பாணம்)

''கொழும்பு மாநகரசபை 1978ம் ஆண்டு 'யுனிசெவ்' திட்ட உதவியைப் பெற்று 1983ம் ஆண்டு மேலதிக உதவியைப் பெற நடவடிக்கை எடுத்துள்ளது. ஆனால் யாழ் மாநகரசபை 1984ம் ஆண்டே இந்த உதவியைப் பெற்றுள்ளது''

யாழ். சனசமூகநிலைய பிரதிநிதிகள், மாதர் சங்க பிரதிநிதிகள் மாநாட்டில் உரையாற்றிய யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு. சி. வீ. கே. சிவஞானம் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ் மாநகரசபை கமிட்டி அறையில் நடந்த இக் கூட்டத்தில் மாநகரசபை ஊழியரும் கலந்துகொண்டனர். திரு. சிவஞானம் மேலும் கூறியதாவது;

''யூனிசெவ் திட்டத்தின்கீழ் 750 ரூபாவுக்கு குறைய வருமானமுள்ள மக்கள் வாழும் பகுதி அபிவிருத்திசெய்யப்படும். யாழ் நகரசபை எல்லைக்குள் இப் பகுதியில் வாழும் மக்கள் பற்றிய புள்ளிவிபரங்கள் திரட்டப்பட்டுவருகிறது. ''யூனிசெவ் திட்டத்தின் கீழ் 200 லட்சம் ரூபா உதவி கிடைக்கவிருக்கிறது. இந்த வருடம் 30 லட்சம் ரூபா கிடைக்கும். மிகுதி அடுத்த நான்கு வருடங்களில் கிடைக்கும். இத் திட்டத்தின் கீழ் வலைகள் திருத்தும் தொழிற்சாலை ஒன்றும், வள்ளம் திருத்தும் தொழிற்சாலை ஒன்றும் அமைக்கப்படும் இத்தொழிற்சாலைகளை பெண்களே நிர்வகிப்பார்கள். நுண் இழைக் கண்ணாடி வள்ளம் ஒன்றும் வாங்கப்படும். இந்த வள்ளத்தின் மூலம் பிடிக்கப்படும் மீன்கள் ஒரு கிழமைக்கு ஒரு நாள் வருமானம் குறைந்த பகுதியில் வாழும் குழந்தைகளுக்கு இலவசமாக வழங்கப்படும். இந்த மீன்பிடி நிர்வாக குழுவிலும் பெண்களே பொறுப்பாளர்களாக இருப்பார்கள்.

''யுனிசெவ்'' திட்டத்தில் யாழ் மாநகரசபை சேர்க்கப்படவில்லை. பின்னர் எடுக்கப்பட்ட துரித முயற்சியினால் சேர்க்கப்பட்டது. இத் திட்டம் நகர்ப்புற குறைந்த வருமானம் உள்ள குடும்பங்கள் ஒழுங்காக இணைந்து வாழும் பகுதியில்தான் அமுல்நடத்தப்படும்.

''750 ரூபா ஆகக்கூடிய வருமானம் உள்ளவர்கள் இத் திட்டத்தில் உதவிபெறுவார்கள்.

இத் திட்டத்தின் கீழ் குழந்தைசத்துணவு; தாய்மார் நலம் பேணப்படும்.

குருநகர், நாவாந்துறை, பொம்மைவெளி, கொட்டடி, பாஷையூர், தேவரிகுளம், கொழும்புத்துறை, திட்டி ஆகிய பகுதிகளுக்கு இத் திட்டத்தின்கீழ் உதவி கிடைக்கும்.

''வீதி அமைத்தல்; வடிகால் மலகூடம் அமைத்தல், பெண்கள்சுயமானகூட்டுவேலை ஆகியவை செயல்படுத்தப்படும்.

குருநகர் பகுதிகளில் வாளி மலசலகூடங்களை உடனடியாக நீரடைப்பு மலகூடங்களாக மாற்றுவதில் சிரமம் இருக்கிறது இப்பகுதியில் 40 மல கூடங்களுக்கு பொதுவான

(5-ம் பக்கம் பார்க்க)

## மக்கள் கருத்து

### காணியற்றவர் நிலை?

பத்துலட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் இந்த வருடத்தில் பிரதமரால் ஆரம்பிக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளது. மிகவும் வரவேற்கத்தக்கதொரு சிறப்பான திட்டம்.

எவ்வளவு தூரம் நேர்மையாகவும் கிடைக்க வேண்டியவர்களுக்குக் கிடைக்கக் கூடியதாக செயல்படப் போகின்றதோ என்பது பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

வெள்ளம் தேங்காத வீட்டுக்காரர்கள்கூட வெள்ள நிவாரணங்களைப் பெற்றுக் கொண்டுவிடுகின்றார்கள். வெள்ளத்தில் தத்தளித்தவர்கள் வானத்தைப் பார்க்கின்றார்கள்.

நிலைமை இதுவிஷயத்திலும் இப்படியில்லாமல் தகுதியானவர்களுக்கு கிடைக்க சம்பந்தப்பட்டவர்கள் எல்லோரும் கண்ணை விழித்துக்கொண்டு கண்காணிப்பாக இருப்பது மிக்க அவசியம் வீடற்றவர்கள் மட்டுமல்ல யாழ்ப்பாணத்தில் காணியற்றவர்களும் இன்று மிகமிக அதிகம்.

யாழ்ப்பாணத்துச் சுயநலங்கள் காணியின் விலைகளை ஏற்றி விட்டு காணியற்றவர்களை நட்ட நடுத்தெருவில் விட்டுவிட்டிருக்கின்றன.

ஆயிரம் நல்ல திட்டங்களுக்குள்ளும் இந்த அப்பாவிகள், அபலைகள் அகப்படுவதேயில்லை.

எல்லா இடமும் தண்ணீர். ஆனால் குடிப்பதற்கு ஒரு சொட்டுத் தண்ணீரில்லை.

இந்தக் காணியற்றவர்களின் கதையும் இதுபோன்றதுதான்.

இருந்த காணிகளை எத்தனையோ தந்திரங்களை உபயோகித்து வசதிபடைத்தவர்கள் வாரிக் கொண்டு விட்டார்கள்.

இப்படி இயலாதவர்கள் இங்கே 'மேலே வானம் கீழே பூமி' என்று தெருத்தெருவாக அலைகின்றார்கள்.

காணியற்றவர்கள் வரிசையில் இப்போது நடுத்தரவர்க்கமும் அகப்பட்டு நசிபடுகிறது

நிழல் அற்ற நிலை இவர்களது நிலை.

காணியற்றவர்கள் ஏதோ ஒரு இடத்தில் குந்தி எழும்புவதற்கு பெரிய மனதுள்ளவர்கள் ஏதேனும் அவசரத் திட்டம் ஒன்றை உருப்படியான திட்டம் ஒன்றை உடனடியாகக் கொண்டுவரவேண்டும்.

பூதான இயக்கம் இங்கு ஆரம்பித்தால்கூட வரவேற்கத்தக்கதாக இருக்கும்,

விநோபாவேக்கு நாம்செய்யும் பெரிய கைமாறாக இது இருக்கும்.

''காணிநிலம் வேண்டும் -பராசக்தி
காணிநிலம் வேண்டும்''

-கணேஷ்

### நோர்வேயில் வேலை வாய்ப்பு:

## குறுகிய வழியில் பணத்தை விரயம் செய்யாதீர்!

19-11-83 தேதி நாங்கள் தங்கள் பத்திரிகைக்கு அனுப்பிய நோர்வேயில் கல்விபயில்வதற்கு எடுக்கவேண்டிய முன் நடவடிக்கைகள் பற்றிய கடிதம் 1-12-83 அன்று தங்கள் பத்திரிகையில் வெளிவந்ததாக அறிந்தோம். அதற்கு முதற்கண் நன்றிசெலுத்தும் இவ்வேளையில் அக்கடிதம்பற்றி மேலும் சில விபரங்களை இங்குதரவேண்டிய நிலையில் இருக்கின்றோம். அதாவது,

இலங்கையில்வசிக்கும் எமது சகமாணவர்கள் குறுக்குவழிகளைநாடி வீண பணத்தை விரயம் செய்யாமல் தாமே தன்னிச்சையாகமுயற்சிசெய்து நோர்வேயில் கல்விப்பயணத்தை மேற்கொள்ளவேண்டும் என்ற காரணத்தினால்தான் அப்படிப்பட்ட ஒரு ழிப்படுத்தல் கடிதத்தை எழுதினோம். அக்கடிதத்தில்: (1) பாடசாலை விபரங்கள் அறியும் இடம். (2) பல்கலைக்கழக விபரங்கள் அறியும் இடம்பற்றி குறிப்பிட்டிருந்தோம். ஆனால் அதே வேளையில் பல மாணவர்கள் தமக்கு பாடசாலை இடம் எடுத்து தரும்படியும் பிரயாண ஒழுங்கு செய்துதரும்படியும் எம்மைக் கேட்டுள்ளார்கள்.

அந்த மாணவசகோதரருக்கு நாம் கூறிக்கொள்வது என்னவென்றால் ''நீங்கள் தொடர்பு கொள்ளவேண்டிய இடங்களுக்கு தொடர்புகொண்டால் அவர்கள் உங்களுக்கு தேவையான எல்லாவிபரங்களையும் தருவார்கள். இதேவேளையில் எமது சங்கமானது தமிழ்கலைகலாச்சாரங்களைவளர்ப்பதற்கு மாத்திரமே இயங்குவதற்கு இங்குள்ள அரசாங்கம் உதவி செய்கின்றது உங்களுக்குபாடசாலைகள் எடுத்துக்கொடுப்பதோ அல்லது பிரயாணஒழுங்குகள் செய்துதருவதோ எங்களால் முடியாத காரியமாகும். அதற்காக நாம் மிகவும் வருந்துகின்றோம்.

எனவே மீண்டும் எமது சகோதரர்கட்கு நாம் கூறிக்கொள்வது என்னவென்றால் நீங்கள் பின்வரும் விலாசங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்.

பாடசாலை விபரம் அறியும் இடம்:-

INFORMATION OFFICE
FOR FOLKEHGSKOLE,
NYGATA 12
OSLO 1
NORWAY.

பல்கலைக்கழக விபரம் அறியும் இடம்;-

THE FOREIGN
STUDENTS ADVISER
UNIVERSITY OF BERGAN
5000 BERGEU
NORWAY.

மேற்குறித்த இடங்களிலிருந்து விபரங்களை நீங்கள் பெற்றுக்கொண்டதும் அங்கு உங்கள் கல்வியை தொடங்குவதால் உள்ள நன்மை தீமைகளை சீர்தூக்கிப்பாருங்கள். சீர்தூக்கிப்பார்த்ததும் நீங்களாகவே உங்கள் பிரயாணத்தை ஒழுங்கு செய்யுங்கள்.

இறுதியாக உங்கள் அனைவருக்கும் எமது கழகத்தின் சார்பில் தமிழ்கலந்த புதுவருட வாழ்த்தைத் தெரிவிக்கின்றோம்.

காரியதரிசி
தமிழ் மாணவர் சங்கம்,
பேர்கன், நோர்வே.



திருகோணமலை புனித சூசையப்பர் தமிழ்ப் பாடசாலை மண்டபத்தில் 'அப்பலோ - 11 வெற்றிவிழா அண்மையில் நடைபெற்றது. அப்பொழுது அப்புவி வெற்றி பற்றி முன்கூட்டியே அறிவித்த சோதிடப் பேராசான் திரு க. வேலுப்பிள்ளை அவர்களுக்கு விழாவில் பிரத அதிதியாகக் கலந்துகொண்ட அமெரிக்கரான வண. பிதா ஈ, ஜே ஏபியர் பொன்னுடை போர்த்திக் கௌரவிப்பதையும் வேறொரு சந்தர்ப்பத்தில் சோதிடக் கலாநிதி பட்டத்தைத் தந்தை செல்வா வேலுப்பிள்ளைக்கு வழங்குவதையும் படங்கள் காட்டுகின்றன.

[சோதிடகலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை அமரத்துவமடைந்து இன்று 31 வது தினமாகும்]

# வவனியாவில் அத்துமீறிக் குடியேறிய இந்திய வம்சாவளியினரை வெளியேற்ற உத்தரவு!

(வவனியா)

வவனியா பகுதியில் அத்துமீறிக் குடியேறிய இந்திய வம்சாவளியினரை காணிகளிலிருந்து வெளியேற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வவனியா அரச அதிபர் திரு கே. ஸி. லோகேஸ்வரன் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

வவனியா மாவட்டத்தில் சுமார் 4500 குடும்பங்கள் அத்துமீறி குடியேறியுள்ளனர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

பாவற்குளம் பகுதியில் குடியேறியுள்ள 250 குடும்பங்கள் உடன் வெளியேறும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, காலக்கெடுவும் விதிக்கப்பட்டுள்ளது.

அடுத்தமாதம் 10ம் திகதி வரை காலக்கெடு விதிக்கப்பட்டுள்ளது.

அடிக்கடி இடம்பெற்ற வன்செயலினால் பாதிக்கப்பட்ட மலையகத் தோட்டத்தொழிலாளிகளே வவனியா பகுதியில் வந்து குடியேறினார்கள்.

## ஜூலை கலவரத்தில் பாதிக்கப்பட்ட சுகாதார திணைக்கள ஊழியர் நாளை கூடுவர்

(யாழ்ப்பாணம்)

ஜூலை கலவரங்களினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து இதுவரை வேலைக்குத் திரும்பாத சுகாதார திணைக்களத்தைச் சேர்ந்த சகல ஊழியர்களதும் குறிப்பாக மருத்துவ உதவி சேவையாளர்களை தும் ஆலோசனைக் கூட்டம் நாளைக் காலை யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் நடைபெறும்.

கடந்தவாரம் வெளியிடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானங்களையடுத்து எழுந்துள்ள புதிய சூழ்நிலை பற்றி இக் கூட்டத்துல் விரிவாக ஆராயப்படும்.

## "உண்ணாவிரதப் போராட்டத்தில் ஜனாதிபதி தலையிடவேண்டும்" தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்த பல்கலைக் கழகத் தமிழ் மாணவர்கள் நடத்தும் உண்ணாவிரதப் போராட்டத்தில் தலையிட்டு, அவர்கள் கோரிக்கை நிறைவேற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்கப் பொதுச் செயலாளர் அவசரத் தந்தி ஒன்றை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இத் தந்தியின் பிரதியை உயர்கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஸ்டான்லி கல்பகேக்கும் அனுப்பி வைத்துள்ளதுடன், மாணவர்கள் பிரச்னை சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடத்தகால நேரம் கேட்டு பிறிதொரு தந்தியை கலாநிதி கல்பகேக்கு திரு மகாசிவம் அனுப்பியுள்ளார். (மா)

## ✯ தமிழ் மொழி மூல ஆசிரியர்கள் மீண்டும் ஒரு பயிற்சி நெறிக்கு அழைக்கப்படுவர்!

(மானிப்பாய்)

அண்மையில் போட்டிப் பரீட்சை மூலம் தெரிவுசெய்யப்பட்ட தமிழ்மொழிமூல ஆசிரியர்களுக்கு வடக்கு கிழக்கில் பயிற்சிகளை நடாத்தாது ஏனைய பகுதிகளில் வகுப்புகளை நடத்தியது சம்பந்தமாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினர் கல்விஅமைச்சின் செயலாளர் திரு, ஈ.எல் விஜயமானேயிடமும் உதவிக் கல்விமாஅதிபர் திரு. குணபாலவிக்கிரமரட்ணவிடமும் நேரடியாகச் சந்தித்துத் தமது கவலையைத் தெரிவித்துக்கொண்டனர்.

இந்த வகுப்புகளை தென் இலங்கையில் நடத்துவதால் இவ்ஆசிரியர்கள் . தனியார் பஸ்களில் சென்றபோது எதிர்நோக்கிய கஷ்டங்களையும் அவர்கள் கவனிததுககொண்டு வந்ததுடன் ஐம்பது வீதமானோர் பயம் காரணமாக பயிற்சிக்குச் சமுகம்கொடுக்கவில்லையெனவும் தெரிவித்தனர்.

இவற்றைக் கேட்டறிந்த கல்விமாஅதிபரும், சேணைக் கல்விமாஅதிபரும் அவர்களுக்கேற்பட்ட கஷ்டங்களுக்காகத் தாம் மிகவும் அனுதாபப்படுவதாகத் தெரிவித்ததோடு துணைக்கல்விமா அதிபர் அன்றையதினமே நேரடியாகப் பயிற்சி வகுப்புகளுக்குச்சென்று தமிழ்ஆசிரியர்களைத் தனியாக அழைத்து அவர்களின் குறைகளைக்கேட்டு நிவர்த்திசெய்தது மாத்திரமல்ல போக்குவரத்தில் அவர்கள் அனுபவித்த கஷ்டங்களைத் தாம் மிக்க கவலையுடன் நோக்குவதாகவும் ஆறுதல் கூறினர்.

பயிற்சிக்குச் சமூகமளிக்காதவர்களுக்கு நியமனத்தை ரத்துச்செய்யக்கூடாதென இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தூதுக்கோஷ்டியினர் விடுத்த வேண்டுகோளையும் ஏற்றுக்கொண்ட கல்விமா அதிபர், அவர்கள் மீண்டும் ஒரு பயிற்சி நெறிக்கு அழைக்கப்பட்டு நியமனம் வழங்கப்படும் எனவும் உறுதியளித்தார். அத்துடன் வடக்கு கிழக்கிலும் பயிற்சி வகுப்புகள் நடத்த ஏற்பாடுகள் செய்யப்படுமெனவும் உறுதியளித்தார்.

## புதிய அம்புலன்ஸ் வண்டி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஆஸ்பத்திரியின் தேவைக்கென புதிய அம்புலன்ஸ் வண்டி ஒன்றை சுகாதாரப் பகுதியினர் அனுப்பி வைத்துள்ளனர்.

## ஆலயதரிசனத்தில் இறையடி சேர்ந்தார்

(கரவெட்டி)

அதிகாலை வேளையில் வல்லிபுர ஆழ்வாருக்கு நடைபெற்ற பூசையில் தரிசனம் செய்து கொண்டிருந்த ஒரு பக்தர் வணங்கிக் கொண்டிருந்தபடியே இறையடி சேர்ந்தார்.

பருத்தித்துறை வராத்தப்பளையைச் சேர்ந்த நாகமணி சுப்பிரமணியம் (வயது 73) என்பவரே ஆலயதரிசனம் செய்து கொண்டிருந்தபடியே இறையடி சேர்ந்தவராவர்.

மார்கழி நீராடலுக்காகத் தொண்டு புரிவதற்காக நாள்தோறும் அதிகாலை வல்லிபுர ஆழ்வார் ஆலயத்திற்குச் சென்றுவரும் இவர் அதிகாலை இரண்டரைமணிக்கு நித்திரைவிட்டெழுந்து ஆலயத்திற்குச் சென்றிருந்தார். அப்போது மார்கழி நீராடல் பாட்டுப் பாடப்பட்டது. ஒன்பதாவது பாட்டுப் பாடிக்கொண்டிருந்தபோது வணங்கிக் கொண்டிருந்த இறந்தவர் திடீரெனக் கீழே விழ்ந்தார். பூசைகள் ஸ்தம்பித்தன. வீழ்ந்தவர் வெளியே தூக்கிவரப்பட்டபோது அவர் மரணமாகிவிட்டார் என்பது தெரியவந்தது.

இறுதிக்கிரியைகளில் பருத்தித்துறை தொகுதி முன்னாள் எம். பி. திரு. கே. துரைரத்தினம், பருத்தித்துறை முன்னாள் நகர முதல்வர் சட்டத்தரணி எம். வேலும்மயிலும், ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் தேவஸ்தான தர்மகர்த்தா சபைத்தலைவர் திரு எஸ். தர்மலிங்கம், பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம தலைவர் சுவாமி சித்ரூபானந்தா, யாழ். மாவட்ட அபிவிருத்திசபை புலோலி உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு எம். அருளானந்தம் ஆகியோர் உட்பட சமூகசேவை நிறுவனங்களின் தலைவர்கள், கிராமோதய சபைத்தலைவர்கள். சட்டத்தரணிகள், பத்திரிகையாளர்கள், வர்த்தகர்கள். சிவத்தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## ஐக்கியநாணயசங்க சமாஜக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட ஐக்கிய நாணய சங்கங்களின் சமாசத்தின் விசேட செயற்குழுக் கூட்டம் யாழ்ப்பாணம் கூட்டுறவு உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இச் சமாசத்தின் உபதலைவி திருமதி வேதவல்லி கந்தையா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் சமாஜ உறுப்பினரும் யாழ் கூட்டுறவு உதவி ஆணையாளருமான திரு எஸ் ஞானப்பிரகாசம் கலந்து கொண்டார். ஐக்கிய நாணய சங்கங்களுக்கு நிதி வழங்குவது சம்பந்தமாக இக்கூட்டத்தில் ஆராயப்பட்டபோது புதிய சங்கங்களுக்கும், உற்பத்தியில் ஈடுபடும் சங்கங்களுக்கும் கடன்கள் வழங்குவது பற்றி விசேடமாக ஆராயப்பட்டன. (வண். நிரு)

## உலகத் தமிழ் மாநாட்டில் உயிர்நீத்தவர்க்கு அஞ்சலி!

(யாழ்ப்பாணம்)

தமிழாராய்ச்சி மகாநாட்டில் உயிர்நீத்தவர்களின் நினைவு ஸ்தூபிகளுக்கு தமிழ்க்காங்கிரசினர் மலர் தூவி, மாலை சூட்டி மௌன அஞ்சலி செலுத்தினார்கள்.

முன்னாள் யாழ் மாநகர சபை உறுப்பினர் திரு. ஜேசுதாசன், வாலிபமுன்னணித் தலைவர் திரு. ஈ. ஏ. ஆனந்தராசா ஆகியோர் தலைமையில் தமிழ்க்காங்கிரஸ் உறுப்பினர்கள் அஞ்சலி செலுத்தினார்கள். (க)

## சில்லாலை பஸ் சேவை

(பண்டத்தரிப்பு)

தற்போது ரத்துச்செய்யப்பட்டுள்ள சில்லாலைக்கான அதிகாலை பஸ்சேவையும், இரவு கடைசி பஸ் சேவையும் பாதுகாப்பு காரணங்களுக்காகவே ரத்துச்செய்யப்பட்டிருப்பதாகவும், நிலைமை வழமைக்குத் திரும்பியவுடன் மீண்டும் இந்த பஸ் சேவைகள் வழமைபோல ஆரம்பிக்கப்படவிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வடபிராந்திய போக்கு வரத்துச் சபையின் பொதுமுகாமையாளர், சில்லாலை கிராம அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பிக்கு அனுப்பி வைத்துள்ள பதில் கடிதத்தில் இதனைத் தெரிவித்துள்ளார்.

பஸ் சேவைகள் ரத்துச்செய்யப்பட்டிருப்பதால் சில்லாலை கிராம மக்கள் மிகுந்த சிரமமடைவதாகவும், இச்சேவைகளை மீண்டும் ஆரம்பிக்குமாறும் சில்லாலை கிராம அபிவிருத்திச் சங்கத்தின் சார்பில் அதன் செயலாளர் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி வடபிராந்திய போக்கு வரத்து சபைத் தலைவருக்கு மகஜர் ஒன்றை அனுப்பியிருந்தார்.

அந்த மகஜருக்கு பதிலளித்து எழுதிய கடிதத்திலேயே இவ் விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு)

## 'யுனிசெவ்'...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு குளி அமைக்கப்படும் 2 குடும்பங்களுக்கு ஒரு மலகூடமும் 4 குடும்பங்களுக்கு ஒரு குளியலறையும் 10 குடும்பங்களுக்கு ஒரு குழாய்நீர் கம்பமும், ஒவ்வொரு பகுதியிலும் இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்படும்.

"750 ரூபா வருமானம் குறைந்தவர்களின் விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருகிறது முதல் கட்டமாக 4000 பேரின் புள்ளிவிபரம் யுனிசெவ்'விற்கு அனுப்பிவைக்கப்படும்.

தொடர் மாடி வீடுகள் கட்டவோ, வீடுகளைத் தரம் உயர்த்துவதற்கோ இத்திட்டத்தின் கீழ் ஏற்றுக்கொள்ளப்படவில்லை ஆனால் வீடமைப்புத் திட்டங்களில் மலகூடம், வடிகால், பாதை அமைக்க உதவிசெய்யப்படும்". (க)

## சட்டவிரோத மின்பாவனை குறித்து எச்சரிக்கை

(மாவிட்டபுரம்)

யாழ். அபிவிருத்திச்சபையின் காங்கேசன்துறை உப அலுவலக எல்லைக்குள் சட்டவிரோதமாக இடம்பெறும் மின் பாவனை குறித்து தீவிர கண்காணிப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி உப அலுவலக எல்லைக்குள் சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பாவிக்கப்படுவதை மின்சாரப் பகுதி ஊழியர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

சட்டவிரோத மின்பாவனைகள் எதிர்காலத்தில் கண்டு பிடிக்கப்பட்டால மின் விநியோகம் உடனடியாக துண்டிக்கப்படுவதுடன் மின் பாவனையை துஷ்பிரயோகம் செய்தமைக்காக சட்டரீதியாகவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று உபஅலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. வ. இராமச்சந்திரன் எச்சரித்துள்ளார்.

## மறைவுக்கு அஞ்சலி

(புலோலி)

யாழ். மாவட்ட விசேட சேவை உத்தியோகத்தர் சங்கம் அண்மையில் மரணமான பருத்தித்துறை விசேட சேவை அலுவலர் சிவராஜாவின் மூன்று பிள்ளைகளின் பெயரிலும் தேசிய சேமிப்பு வங்கியில் கணக்குகள் திறந்து அக் கணக்குகளில் 18,200 ரூபாவை வைப்புச்செய்து, அப்பண வைப்புப் புத்தகத்தைச் சிவராஜாவின் குடும்பத்தினரிடம் கையளிக்கவுள்ளனர்.

யாழ் மாநகர மண்டபத்தில் யாழ். மாவட்ட விசேட சேவை உத்தியோகத்தர் சங்கத்தலைவர்திரு.எஸ். துரைராசா தலைமையில் சிவராஜாவுக்கு அஞ்சலிக்கூட்டமொன்று நடத்தப்பட்டது.

விசேடசேவை அலுவலர்களான திரு. எஸ் சிவபாலசிங்கம் எஸ். வரதராஜன், திரு. கே. யோசேப், பருத்தித்துறை விளையாட்டதிகாரி திருமதி ஸ்ரீவசந்தி கெங்கேஸ்வரன் ஆகியோர் உட்பட இன்னும் பலர் அஞ்சலி உரைகளை நிகழ்த்தினார்கள்.

## தாலிக்கொடியை அறுத்தவர்களைத்

# துரத்திப்பிடித்த நபர்

## பொலிஸ் அதிபரின் சன்மானம் கிடைக்கும்

(யாழ்ப்பாணம்)

தாலிக்கொடியை அறுத்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் தப்பி ஓடிய இரு நபர்களைப் பிடித்து பொலிசில் ஒப்படைத்தவரை யாழ்.பொலிஸ் அதிபர் ரி. இ. ஆனந்தராசா பாராட்டியுள்ளதுடன் அவருக்கு சன்மானம் வழங்கப் போவதாகவும் தெரிவித்துள்ளார்.

கடந்த 6-ம் திகதி மாவிட்டபுரத்தைச் சேர்ந்த சந்திரமலர் சிவஞான சுந்தரம் என்பவர் பருத்தித்துறை போவதற்காக பஸ் நிலையத்தில் நின்றபோது மோட்டார் சைக்கிளில் வந்த வீரகத்தி மனோகரன், கந்தையா தில்லையம்பலம் ஆகிய இருவரும் அப்பெண்மீது மிளகாய்த்தூளை வீசிவிட்டு தாலிக்கொடியை அறுத்துக் கொண்டு ஓடினராம்,

அப்போது அப்பெண் எழுப்பிய அவலக்குரல் கேட்டு வேலுப்பிள்ளை தில்லைநாதன் என்பவர் அப்பாதையால்வந்து கொண்டிருந்த வாஹனொன்றை தடுத்து நிறுத்தி அதில் துரத்திச்சென்ற போது இடைவழியில் பழுதடையவே அப்பாதையால் சென்ற இ. போ. ச. பஸ்ஸில் ஏறி வழிப்பறிக் கொள்ளையர்களை மடக்கிப் பிடித்து தாலிக் கொடியைக் கைப்பற்றியதுடன், அவர்களைப் பொலிசாரிடம் ஒப்படைத்தார்

தாலிக்கொடி அறுத்தஇடத்துக்கும், கொள்ளையர்களைப் பிடித்த இடத்துக்கும் சுமார் 15 மைல் தூரம் இருக்கும் எனப் பொலிசார் தெரிவித்தனர்.

இத்தகவல் காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அதிபர் ரி. கே. ஜெயராசனுக்கு அறிவிக்கப்பட்டதும் உடனடியாக ஸ்தலத்துக்குச் சென்று பார்வையிட்டு கொள்ளையர்களைப் பிடித்துக் கொடுத்தவரைப் பாராட்டி, அவர்பற்றிய தகவல்களை யாழ். பொலிஸ் அதிபருக்கு அறிவித்தார்.

இயக்கத்தின் பெயரைச் சொல்லி வீடுகளில் கொள்ளை அடிப்போரையும், வழிப்பறி கொள்ளைகளில் ஈடுபடுவோரையும் தடுக்க பொதுமக்கள் விழிப்புடன் இருந்து செயல்பட வேண்டும் என்றும் யாழ். பொலிஸ் அதிபர் கேட்டிருக்கிருர். (மா)

## இன்றைய பலன்

மார்கழி மாதம் 27ம் திகதி
புதன்கிழமை
(11-1-84)

மேடம்: பிரிந்தவர் இணைவர் வீட்டில் சுப கருமங்கள் இடம் பெறலாம் தொழில் துறையில் முன்னேற்றங்கள் தென்படும் பேச்சுத் திறனல் பிறரைத் திகைக்க வைப்பீர் பொருளாதாரத் துறையில் செலவுக்கேற்ற நிலை தென்படும்.

இடபம்: சகோதர வழிச் சஞ்சலத்திற்கு இடமுண்டு நினைத்த கருமங்களில் தடை ஏற்படும் மனக்கிலேசத்துடன் சிறிய பிரிவுகள் ஏற்படும் உடல் நலத்தைப் பேணவும்.

மிதுனம்: பிறரின்போற்றலை மனம் நாடும் தாய்வழி சுகத்தைத் தேடும் வாகன சுகத்துடன் வரவிலும் சமநிலை தென்படும் நல்லநாள்.

கடகம்: குடும்பத்தில்இணைப்புகள் இறுகும்புத்திரர்மகிழ்ச்சி புகழ்ச்சியைத்தரும் தொழில் துறையில் செல்வாக்கு உயரும் சுபதினம்.

சிங்கம்: மித்துருக்கள் சத்துருக்களாவர் ஆயுத பீடையும் ஆபத்தும் அருகில் உண்டு அவதானத்துடன் செயல்படவும் பிரிவுத்துயர் வாட்டும்.

கன்னி: பிரம்மச்சாரிகளை காதல்கணை தாக்கும் களஸ்திர வழிச் சுகமும் கன்னியர் கவர்ச்சிக்கும் இடமுண்டு

(7ம் பக்கம் பார்க்க)

## விவசாயிகளின் எந்தப் பொருளையும் வாங்கத் தயார்!

### யாழ். ப. நோ. கூ. சங்கம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். ப. நோ. கூ. சங்கம் நல்லூர் கல்வியங்காடு சந்தையை 84-ல் குத்தகை எடுத்துள்ளார்கள். குத்தகை எடுத்ததன் நோக்கம் நுகர்ச்சியாளர் - விவசாயிகள் - வியாபாரிகள் அனைவரினதும் தாக்கத்தை குறைப்பதே.

லாபம் சங்கத்தின் நோக்கமல்ல, சேவை மட்டுமே சங்கத்தின் நோக்கம்.

விவசாயிகளின் குத்தகையை பழைய குத்தகைக் காரரின் விகிதாசாரத்திலிருந்து பாதியாக 50 வீதம் சங்கம் குறைத்துள்ளது.

இப்படிச் செய்தபின்பும் கோப்பாய், கல்வியங்காடு, நீர்வேலி, சிறுப்பிட்டி போன்ற சிராமத்து விவசாயிகள் பழைய குத்தகைக்காரர்களின் கையாட்களின் ஆசைவார்த்தைகளை நம்பி, வாழைக்குலை போன்ற விவசாயப் பொருட்களை விற்கும்படி நிர்ப்பந்தப் படுத்துகிறுர்கள் என அறிகிறோம்.

விவசாயிகளுக்கு பூரணசலுகையும் வழங்குவதே சங்கத்தின் நோக்கம், அத்தோடு நியாய விலைபெருத எந்தப் பொருளையும் சங்கம் எந்நேரத்திலும் வாங்கத் தயாராக உள்ளது.

சங்க நிர்வாகத்தில் எந்தத் தரகர் கொடுப்பனவுக்கும் இடமில்லை விலைப்படாத பொருட்களை மறுநாள் பாதுகாப்பாக வைப்பதற்கு பொறுப்பான இடங்களை சங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

இத்தகைய அறிவித்தல்களை யாழ். ப, நோ. கூ. சங்கம் விவசாயிகளுக்கு அறிவித்துள்ளது. (மா)

## 8500 ரூபா நம்பிக்கைமோசடி புகார்;

## பொலிஸ் கான்ஸ்டபிள் அடையாளம் காணப்பட்டார்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தபால்கந்தோருக்கு அருகிலுள்ள பெற்ரேல் நிலையத்தில் 8500ரூபா நம்பிக்கை மோசடிசெய்ததாக செய்யப்பட்ட புகாரைத் தொடர்ந்து கைதுசெய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் பொன்னர் திரவியம் நேற்று நடைபெற்ற அடையாள அணி வகுப்பில் அடையாளம்காணப்பட்டார்.

யாழ் நீதிமன்றத்தில் யாழ். பதில் நீதவான் எஸ். அமிர்தலிங்கம் முன்னிலையில் இந்த அடையாள அணிவகுப்பு நடைபெற்றது.

சாட்சிகளாக அழைக்கப்பட்ட பெற்ரேல் நிலையமனேஜர் இரத்தினசிங்கம் 'பம்பர்' சந்திரகாந்தன் ஆகியஇருவரும் சந்தேகநபரை அடையாளம் காட்டினுர்கள். காசாளர் அடையாளம் காட்டவில்லை.

சந்தேகநபர் முடிமறைக்கப்பட்ட வானில் நேற்று நண்பகல் நீதிமன்றம்கொண்டுவரப்பட்டார்.

சந்தேகநபர் சார்பில் சட்டத்தரணிஆர். பி. சபாரத்தினம், சட்டத்தரணி ரி. லிங்கராசாவின் அனுசரணையுடன் ஆஜராஞர்.

அடையாள அணிவகுப்பின் போது சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினம் டிசம்பர் 13-ம் தேதி யாழ். பொலிஸ் நிலயத்தில், 3 சாட்சிகளுக்கும் சந்தேக நபரை காட்டியிருப்பதால் இந்த அடையாள அணி வகுப்பில்பிரயோசனம் இல்லை. என்று ஆட்சேபித்தார். பதில் நீதவான் எஸ். அமிர்தலிங்கம் ஆட்சேபத்தை பதிவு செய்ததாகத் தெரிவித்து தகுந்த நேரத்தில் இதனை எடுக்குமாறு தெரிவித்தபின் அடையாள அணிவகுப்பை நடத்தினுர்.

பின்னர் சந்தேகநபர் யாழ் நீதவான் எஸ். நாகராசா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்

மற்ரெரு வழக்கு தொடர்பாக கிளிநொச்சி நீதிமன்றத்தில் சந்தேக நபரை இம்மாதம் 17ம் திகதி ஆஜர் செய்யுமாறும் யாழ். நீதிமன்றத்தில் மீண்டும் இம்மாதம் 19ம் தேதி ஆஜர் செய்யுமாறும் தெரிவித்து சந்தேக நபரை றிமாண்டில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (க)


# மேர்ச்சன்ட் பினன்ஸ்

## லிமிட்டெட்

(அங்கீகரிக்கப்பட்ட கிறெடிற் ஏஜென்சி)
4, 1-ம் மாடி நவீன சந்தைக் கட்டிடம்,
யாழ்ப்பாணம்
கூட்டிணைக்கப்பட்ட தேதி 2 - 05 - 1979

## நிலையான வைப்புத் திட்டங்களின் புதிய வட்டி வீதங்கள்

| காலம் | வருட வட்டி விகிதம் மாதாந்த வட்டி கொடுத்தல் | காலமுடிவில் வட்டி கொடுத்தல் |
|---|---|---|
| 6 மாத வைப்பு | | 18 % |
| 1 வருட வைப்பு | 20 % | 22 % |
| 2 வருட வைப்பு | 22 % | 24 % |

பிரதான தொழில் வகைகள்

★ வியாபாரப் பொருட்களின் பொறுப்பில் கடன் வழங்கல்.
★ வங்கி, மறுதாபனக் கடன் ஒழுங்குசெய்தல்.
★ வர்த்தக வாகனங்கள் (லொறி), உழவு யந்திரங்கள் (ட்ராக்டர்), மினி பஸ் முதலியனவற்றிற்கு வாடகைக்கொள்வனவுக்குக் கடன் கொடுத்தல்.
★ இடைக்கால கடன் கொடுத்தல்.
★ காப்புறுதி செய்யப்பட்ட பண்டகசாலை வசதிகள்

நிதி நிலைமை

| | 31-3-81-ல் முடிந்த வருடத்திற்கு | 31-3-82 ல் முடிந்த வருடத்திற்கு | 31-3-83-ல் முடிந்த வருடத்திற்கு |
|---|---|---|---|
| | ரூ 000 | ரூ 000 | ரூ 000 |
| பங்கு மூலதனம் ... | 100, | 100, | 100, |
| ஒதுக்கிய நிதி ... | — | 300, | 560, |
| நிலையான கடன் முறிகள் ... | 585, | 597, | 597, |
| வைப்புக்கள் ... | 3, 44, | 6 615, | 10,157 |
| பெற்ற கடன்கள் ... | — | — | — |
| வரிக்குமுன் லாபம் ... | 193, | 191 | 639, |
| வரிக்குப்பின் லாபம் ... | 193, | 191, | 319, |
| வழங்கப்பட்ட பங்கு லாப வீதம் ... | 25% | 30% | — |
| வழங்கப்படவிருக்கும் பங்கு லாப வீதம் ... | — | — | 30% |

இயக்குனர் சபை

| | | |
|---|---|---|
| டாக்டர் யோகு பசுபதி | M. B. B. S. (Cey.), D. C. H. (Lond.), M. R. C. P. (Lond.) | தலைவர் |
| A. சோமசுந்தரம்பிள்ளை | B. A., F. C. A., | முகாமைத்துவ இயக்குனர் |
| K. லோகநாதன் | B. S. B. A, (U. S. A) | இயக்குனர் - ஆலோசகர் |
| S. தனபாலசிங்கம் | B. Sc (Cey.) | இயக்குனர் - முகாமையாளர் |
| S. மகேந்திரன் | B. Sc. (Cey.) | இயக்குனர் - கடன் வசதிகள் |
| K. நடராசா | B. Sc. Bar - at - Law, | Attorney - at - Law |
| C. மகேசன் | Attorney - at - Law | |
| N. சிவசிதம்பரம் | Retd. S. L. A. S. | |
| V. கார்த்திகேசு | B. Sc. A. M. B. M. I. M. A, M. I, Prod. E. | |

தொலைபேசி: 24183

**வெஸ்லி**
(மாவிட்டபுரம்)
தினசரி 2-30, 6-00
எம்.ஜி.ஆர் - சரோஜாதேவி
**அன்பே வா**

**மனோகரா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
முத்துராமன்-பாலையா
நாகேஷ் - சௌகார்ஜானகி
**பாமா விஜயம்**
(புதிய கொப்பி)

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-30
6-00,
கலை-ஸ்ரீதேவி
[illegible]
**மூன்றாம் பிறை**
(வெள்ளிவிழா சித்திரம்)

**வின்ஸர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30,
6-15, 9-30
அரங்கு நிறைந்த
மகத்தான 3—வது
மகளிர் வாரம்
சிவகுமார் — ராதா
சிவச்சந்திரன் - அருணா
நடித்த
**ஆனந்தராகம்**
(கலர்)
இசை: இளையராஜா

**ஹரன்** (யாழ். நகர்)
ஜனத்திரள் காட்சிகளாக
தினசரி 10-30, 2-30, 4-45
7-15, 9-30
Dee Wallace - Patrick
Macnee
in
**"The Howling"**
Adults only
இப்படம் திரையிடப்பட்ட போது அமெரிக்க மக்கள் இரவில் வெளியே நடமாட அஞ்சினர்கள். அந்த உருவத்தின் மர்மம் என்ன?

இதற்கு மட்டும் ஏன் இத்தனை பெண்கள் கூட்டம்?
**றீகல்** (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-30, 6-15,
9-00
காட்சிக்கு காட்சி ஓட்டமாக வரும் மகளிர் கூட்டம்! டிக்கற் இன்றி வாட்டமுடன் திரும்பிச் செல்லும் ஏமாற்றம்!
மோகன் ......
பூர்ணிமா ஜெயராம் ...
கவுண்டமணி ... ...
நடிக்கும் தேன் சிந்தும்
7 ஸ்வரங்களுடன்
**பயணங்கள் முடிவதில்லை**
(ஈஸ்மென் கலர்)
பொன்விழா காவியம்

**ராஜா** (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
9-00

சிவாஜி - சௌகார்
**பாபு** (புதிய பிரதி)


## உழவர் விழா

(யாழ்ப்பாணம்)
அராலி மாவத்தை விளையாட்டுக் கழகத்தில் உழவர் விழா எதிர்வரும் 15-ம் திகதி கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது

மாட்டு வண்டில் சவாரி, சைக்கிளோட்டப்போட்டி, உதைபந்தாட்டப்போட்டி ஆகியனவும் இடம்பெறவுள்ளன

## தலைவராகத் தெரிவு



புத்துவெட்டுவான் கிராமோதய சபைத் தேர்தலில் திரு. சுப்பிரமணியம் தனபாலசிங்கம் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தில்லை யம்பலப்பிள்ளையார் ஆலயப் பரிபாலன சபை, இளந்தென்றல் விளையாட்டுக் கழகம் ஆகியவற்றின் தலைவரான இவர் சிறந்த சமூக சேவையாளராவார். இளம்சந்ததியினரின் நன்மதிப்புக்குரியவரான இவர் 12 உறுப்பினர் களைக் கொண்ட மேற்படி கிராமோதய சபையின் தலைவராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கிசேடசேவை உதியோகத்தர்கள் திரு. ச.மரியதாசனும் திரு. எஸ். பஞ்சலிங்கமும் கிராமசேவை அலுவலர் திரு. ந. தங்கத்துரையும் தேர்தலை முன்னின்று நடத்தினர்.

## ரூபா 100 வாழ்க்கைப்படி!

(மானிப்பாய்)
நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு வாழ்க்கைப்படியாக 100 ரூபா கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனை மேற்படி சங்கத்தின் செயற்குழு ஊழியரின் நன்மை கருதி இவ்வருடம்முதல் செயல்படுத்தவிருக்கிறது.

இந்த ஊழியர்களுக்கு பொங்கலுக்கு பாக்கிப்பணத்துடன் ரூ. 300 கிடைக்கவிருப்பது குறிப்பிடத்தக்கது.


**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி—கே.ஆர்.விஜயா
**எதிரொலி**
12 1-84 முதல்
**இதயத்தில் நீ**

**சாந்தி** (யாழ். நகர்)
11th and 12th Only
10-30, 2-15, 4 30, 7-00
Kirk Douglas. ..
Richard Harris in
"THE HEROES OF
TELEMARK"
Action Thrill Color

**லிடோ** (யாழ்நகர்)
தினசரி 3 காட்சிகள்
**OMAN II**
(action packed)

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
[illegible]
பிரதாப் - சுஜாதா
**நூல் வேலி**


## ஓய்வு பெற்றார்

(புலோலி)
வவுனியா பொலிஸ் நிலையத்தில் உதவிப்பொலிஸ்இன்ஸ்பெக்டராகக் கடமையாற்றிய திரு.ஏ. கிருஸ்ணராசா கடந்த மாதம்முதல் சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளார்.

## இன்றைய...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)
காதல் வீணை மீட்டப்படும்.

துலாம்: கிட்டிவரும் கெட்ட பெயர் முன்னேற்றத்தை தட்டிக்கழிக்கும் எம் முறையினருடனும் அவதானத்துடன் தொடர்பு கொள்ளவும் தொழில் துறையைப் பாதுகாக்கவும் தொல்லைகள் நிறைந்த தினம்.

விருச்சிகம்: பெரியோர் பாராட்டும் பிதாவழிச் செல்வாக்குக்கும் இடமுண்டு இறை வழிபாட்டை இதயம் நாடும் மகிழ்ச்சிகரமான தினம்.

தனுசு: தொழில் துறையில் வெற்றியுண்டு தொல்லைகள் நிவர்த்தி விருந்தினர் வரவும் வேடிக்கையும் இடம்பெறும் மகிழ்ச்சிகரமான பயணங்களுக்கும் இடமுண்டு.

மகரம்: கடன் தொல்லை நிவர்த்தியாகும் தித்திக்கும் செய்தியும் தேனான வாழ்வும் கிட்டும் வருப்படியான தினம்.

கும்பம்: சீறிவரும் கோபம் சிந்தனையைத் தடுமாற வைக்கும் வழக்கு விவகாரங்களைத் தவிர்க்கவும் துணிச்சலுடன் எதிர்நீச்சல் போடின் வெற்றி கிட்டும்.

மீனம்: குடும்பத்தில் கவலை உருவாகும் குறுக்குவழித் தலையீடு புதிர்போடும் வாழ்க்கையில் சோர்வுக் கிடமுண்டு உணவு விடயங்களில் அவதானம் வேண்டும்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை
குவேந்திரன்

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட
நீதிமன்றத்தில்
சுன்னாகத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை பாலசுப்பிரமணியம் என்பவரின் மரணசாதனமில்லா மரணச் சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்
வேலுப்பிள்ளை பாலசுப்பிரமணியம் கைம்பெண்
மகாலட்சுமி — சுன்னாகம்.
மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் } இல 177

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1984ம் ஆம் ஆண்டு தை மாதம் 25ஆந் நாளன்று முற்பகல் 9-15 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஆழ்வார்
சிவபாதசுந்தரம்
பதிவாளர்

1983ம் ஆண்டு கார்த்திகை மாதம் 30 ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

என்னால் எழுதப்பட்டது:
செ. இராமலிங்கம்
மனுதாரின் சட்டத்தரணி
10871

## சுதேச வைத்திய அமைச்சருக்கு மகஜர்

(கிளிநொச்சி)
கிராமிய அரசினர் ஆஸ்பத்திரிகளை ஆயுர்வேத ஆஸ்பத்திரிகளாக மாற்றச் சுதேச வைத்தியத்துறை அமைச்சு எடுக்கும் முயற்சியை வரவேற்று வடபிரதேச சித்த ஆயுர்வேத வைத்திய சங்கம் மகஜர் ஒன்றைச் சுதேசவைத்தியத்துறை அமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ளது.

அத்துடன் சில கோரிக்கைகளையும் பிரஸ்தாப அமைச்சரிடம் முன்வைத்துள்ளது.

இச்சங்கத்தின் தலைவர் டாக்டர் கே. வி. கே திருலோகமூர்த்தியினால் சங்க சார்பில் அனுப்பிவைக்கப்பட்டுள்ள மகஜரில் வடபகுதியில் இடம் பெயர்ந்து வந்துள்ள ஆயுர்வேத பல்கலைக்கழக மாணவரின் நலன் கருதியும், கைதடியில் ஆயுர்வேத சுதேச பல்கலைக்கழகப் பிரிவைக் காலம் தாழ்த்தாது நிறுவ நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும், மூன்று ஆண்டுகளுக்குமுன்பு ஆயுர்வேதத் திணைக்களத்தால் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட விசேட வைத்தியர்களுக்கான நேர்முகப் பரீட்சைகளை உடன் நடத்தவேண்டும் என்றும்,

பொது வைத்தியர்களாகப் பதிவு செய்துகொள்வோருக்கான நேர்முகப் பரீட்சைகள் கடந்த மாதம் 31ம் திகதி நடைபெறவுள்ளதற்கான அறிவித்தல்கள் 30ம் திகதியே கிடைத்தன. இதனால் வடபகுதிப் பரீட்சார்த்திகள் தோற்றமுடியாது போய்விட்டது. எனவே பிறிதொரு தினத்தில் இப்பரீட்சார்த்திகள் தோற்ற அனுமதி வழங்கப்படவேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

## யாருடையது?


யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியைச் சேர்ந்த திரு. கருணாரத்தினம் என்பவர் ஒரு மூக்குக் கண்ணாடியையும் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த திரு. சிவானந்தராசா என்பவர் திறப்பு ஒன்றினையும், திரு. யேசுதாசன் என்பவர் திரு. எஸ். ஏ.ஜெயநாதன் என்பவருடைய சாரதி அனுமதிப்பத்திரத்தினையும், இன்னுமொரு அன்பர் திரு. நாகமணி ஜெயராசா என்பவருடைய அடையாள அட்டையையும் கண்டு எடுத்து 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார்கள்.

உரியவர்கள் தகுந்த அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.


**லேத் இயக்குநர் தேவை**
மூன்று வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள
**லேத் இயக்குநர் (Latheman) தேவை.**
நேரில் வரவும்.
தகுதிக்கேற்ற நல்ல சம்பளம் கொடுக்கப்படும்.
உடனே தொடர்பு கொள்ளவும்.
**சேவி கிளாஸ் & மெட்டல் வேக்ஸ்,**
நீர்வேலி. (090)


## அந்தியேட்டி அழைப்பும் 31-ம் நாள் நினைவஞ்சலியும்

**அமரர் க. ச. கந்தையா பத்தர் அவர்கள்**
(உரிமையாளர், தங்க நகைமாளிகை, உரும்பராய்)
தோற்றம்: 16-10-1925 மறைவு: 12-12-1983



எமது குடும்பத்தலைவரும், அடியார்கள் நேசருமான அமரர் க. ச. கந்தையா அவர்கள் மதுரையில் 12-12-83ல் இயற்கை எய்தினார்கள். அன்னாரின் சபிண்டீகரண ஆத்மசாந்திப் பிரார்த்தனை (11-1-84ல்) இன்று அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அப்பிரார்த்தனையில் அவர்களுடன் பழகிய அன்பர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு விநயமாய் வேண்டுகிறோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்.
(080)

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

**திருமதி அன்னப்பிள்ளை காசிப்பிள்ளை**
மலர்வு: 1901-06-02 உதிர்வு: 1983-12-12




●

தனங்கிளப்பு வாசியான திருமதி அன்னப்பிள்ளை காசிப்பிள்ளையின் ஈமக்கிரியைகளில் கலந்து கொண்டு பல்வகைகளிலும் உதவிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், அனுதாபச்செய்தி அனுப்பியவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்

●

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

கா. குமாரசுவாமி,
சிவன் கோவில் வீதி. சாவகச்சேரி. (078)



கட்டம் கட்டமாக நடைபெறும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் சில மாணவர்களை இங்கு காணலாம். --படம்: தேவா

## உண்ணாவிரதப் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாளாக நடைபெற்றுக் கொண்டிருந்த சாகும்வரை உண்ணாவிரதத்தில் மேலும் இரு மாணவிகள் இப்பொழுது சேர்ந்துள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக சிவன் கோவில் முன்றலில் அமைக்கப்பட்டிருந்த கிடுகுக் கொட்டகையில் உள்ள கட்டில்களில் சாகும் வரை உண்ணாவிரதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவர்கள் படுத்திருந்த நிலையில் காணப்பட்டனர்

நேற்றுப் பெய்த கடும்மழையில் கொட்டகையிலிருந்து நீர் ஒழுகிக் கொண்டிருதந்தால் உண்ணாவிரதிகள் பாதிக்கப்பட்டிருந்தனர். இவர்களைப் பார்வையிட்டு கவலையுற்ற நல்லூர் ப. நோ. கூ. சங்க ஊழியர்கள் தாங்கள் வாடகைக்கு கொடுத்து வரும் தகரக் கொட்டகையை இலவசமாக நேற்று வழங்கினர். இக் கொட்டகையினுள் ஒன்பது மாணவ - மாணவிகளும் இருந்தபடியே மாணவத் தொண்டர்களால் நகர்த்தப்பட்டனர்.

நேற்றுப் பகல் பத்திரிகைகள் கூடப் பார்க்க முடியாத நிலையில் உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளதாக உண்ணாவிரதமிருந்த மாணவர்களில் ஒருவர் சைகைமூலம் தெரிவித்தார்.

இவர்களுக்கு உதவியாக இரவு பகலாக மாணவ மாணவிகளடங்கிய 20 தொண்டர்கள் பணியாற்றி வருகின்றனர்.

இவர்களுக்குப் பக்கத்தில் ஏற்கனவே போடப்பட்டிருந்த கூடாரத்தில் கட்டம் கட்டமாக உண்ணாவிரதமிருந்து வரும் இடம் பெயர்ந்த பல்கலைக்கழக மாணவர்களுடன், யாழ். பல்கலைக்கழக முதலாம் வருட கலைப்பீட மாணவர்கள் நேற்றிருந்தனர்.

இதே நேரத்தில் கடந்த இரு நாட்களாக வகுப்புக்களைப் பகிஷ்கரித்துவந்த யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், இன்று காலைகூடி தங்கள் அடுத்த நடவடிக்கை குறித்து முடிவு செய்யவுள்ளனர்.

இன்று தனியார் கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த மாணவர்கள் உண்ணாவிரதத்துக்கு ஆதரவு தெரிவித்து கல்லூரிகளை மூடப்போவதாகவும்' உண்ணாவிரதத்தில் கலந்து கொள்ளப் போவதாகவும் தெரிவித்ததாக மணவர் ஒருவர் சொன்னார்.

### 22 தொழிற் சங்கங்கள்

மாணவர்களின் உண்ணாவிரதப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து யாழ். மாவட்டத்திலுள்ள 22 தொழிற் சங்கங்கள் ஒரு மணித்தியாலம் அமைதியான மறியல் போராட்டத்தை நடத்தப்போவதாக அறிவித்துள்ளனராம்.

தொழிற்சங்க உறுப்பினர்கள் தாங்கள் சார்ந்திருக்கும் அரச-கூட்டுத்தாபன-தனியார் நிறுவனங்களின் முன்னிலையில் இம்மாதம் 13-ம் திகதி தொடக்கம் 20-ம் திகதி வரை பகல் 12 மணிக்கும் ஒரு மணிக்கும் இடையில் தங்கள் இருக்கைகளைவிட்டு வெளியேறுவர் என்றும், மாணவர்களின் உண்ணாவிரதப் போராட்டத்துக்கு சாதகமான சுலோக அட்டைகளைத்தாங்கி அமைதியாக அலுவலகங்களின் வாயிலில் நின்றுவிட்டு பின்னர் கடமைக்குச் செல்வார்கள் என்றும் தொழிற்சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

### ஜனாதிபதி அமைச்சர்களுக்குத் தந்திகள்

இடம்பெயர்ந்த பல்கலைக் கழக தமிழ்மாணவர் ஒன்றியம் தங்களது உண்ணாவிரதக் கோரிக்கையைக் குறிப்பிட்டு, ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் உட்பட திரு சரத்முத்தெட்டுவேகம, திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, த. வி. கூட்டணி செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம், கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா, திரு. கே. பி. சில்வா, அமைச்சர்கள் தொண்டமான், கே. டபிள்யூ. தேவநாயகம், கலாநிதி ஸ்டான்லி கல்பகே ஆகியோருக்குத் தந்திகள் அனுப்பிவைத்துள்ளனர்.

உண்ணாவிரதப் போராட்டத்திற்கு உதவிகள் அளித்து வரும் இடம்பெயர்ந்த பல்கலைக்கழக மாணவர்கள் தங்கள் நடவடிக்கைகளை யாழ். மாவட்டத்தில் தொடர்ந்து மேற்கொள்ள தனியார் பஸ்கள் வசதிகள் செய்து வருவதாக மாணவர் ஒருவர் சொன்னார். (மா)

# "தமிழர் லட்சியம் நிறைவேற சுமூக முடிவுவேண்டும்!"

## உயிர் நீத்தவர்களுக்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

சர்வகட்சி மாநாடு தமிழ் மக்களின் லட்சியத்தை அடையவழி செய்யவேண்டும். அது தான் தமிழுக்காக உயிர்த்தியாகங்கள் செய்த இளைஞர்களுக்குச் செய்யும் கைமாறுகும். இம் மாநாட்டில் சுமுகமான முடிவு ஏற்பட்டு தமிழ் மக்கள் பிரச்னை நிரந்தரமாக தீரவேண்டும்.''

தமிழாராய்ச்சி மாநாட்டில் உயிர்நீத்தவர்களின் பத்தாண்டு நினைவு தினத்தில் பேசிய கூட்டணியைச் சேர்ந்த யாழ் மாநகரசபை முன்னாள் மேயர் திரு. இராஜா விசுவநாதன் நேற்று மேற்கண்டவாறு கூறினார்

முற்றவெளியில் உள்ள நினைவு ஸ்தூபிகளை சுற்றியுள்ள பகுதி வாழைகள் நாட்டி தோரணங்கள் தொங்கவிடப்பட்டிருந்தது.

கூட்டணியைச் சேர்ந்த முன்னாள் யாழ் மாவட்டசபைத் தலைவர் திரு எஸ் இராசேந்திரன் தலைமையில் இந்நினைவு தினம் நேற்றுக்காலை நடைபெற்றது.

யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சி. வீ. கே. சிவஞானம், முன்னாள் யாழ். மேயர் திரு. சி. நாகராசா, யாழ். பெற்றோர் சங்க செயலாளர் திரு எஸ்.பொன்னையா, திருமதி பி. அன்னலட்சுமி, த. விடுதலைக் கூட்டணிப் பிரமுகரும், தெல்லிப்பளை ப நோ கூ. சங்கத் தலைவர் திரு. சிவமகாராசா மற்றும், கூட்டணியைச் சேர்ந்த யாழ். மாவட்டசபை முன்னாள் உறுப்பினர்கள், கூட்டணியைச் சேர்ந்த யாழ் மாநகரசபை முன்னாள் உறுப்பினர்கள், யாழ். மாநகரசபை ஊழியர்கள் கலந்துகொண்டனர்.

நினைவு ஸ்தூபிகள் ஒவ்வொன்றுக்கும், மலர்மாலை சூட்டி அஞ்சலி செலுத்தப்பட்டது. கற்பூரம், மெழுகுவர்த்தி சுற்றிவர எரிந்து கொண்டிருந்தது

சர்வமத அனுஷ்டானம் இடம்பெற்றது. நல்லை ஞானசம்பந்த ஆதீன ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தம்பிரான் சுவாமிகள், ஆனைக்கோட்டை சிவஸ்ரீ குகதாசக் குருக்கள், வணபிதா ஜெபநேசன், வணபிதா ஆர். சர்வானந்தா, ஜனாப் சுல்தான் ஜஃபார் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர். சிறுவர்கள் பக்திப்பாடல்கள் பாடினார்கள்.

யாழ். முன்னாள் மேயர் திரு. விசுவநாதன் மேலும் கூறியதாவது; ''தமிழ்த் தலைவர்கள் எடுத்த நடவடிக்கையினால் தமிழர் பிரச்னையில் உலக கவனம் திரும்பியது இதனால்இதற்குதீர்வுகாணவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இன்று இப்பிரச்னையைத்தீர்க்க சர்வகட்சி மாநாடு கூடுகிறது. இம் மாநாட்டில் ஒரு நல்ல முடிவு ஏற்படவேண்டும்.''

முன்னாள் பேராசிரியர் திரு. நேசையா கூறியதாவது:

''நாங்கள் பல தடவை தியாகிகளை நினைவுகூர்ந்துள்ளோம். இன்று பத்தாவது நினைவு தினத்தில் கூடியிருக்கிறோம்.

''வட்டமேசை மாநாடு வெற்றிகரமாக முடியவேண்டுமென்றும், நல்ல தீர்ப்பு ஏற்படவேண்டுமென்றும் இந்த நினைவு தினத்தில் இறைவனைப் பிரார்த்திப்போம்.

''இந்த நாட்டில் கடந்த காலத்தைப்போல் எதிர்காலத்திலும் சிங்கள, தமிழ் மக்கள் ஒற்றுமையாக வாழவேண்டும். பல நூற்றாண்டு காலமாக நாம் ஒற்றுமையாக வாழ்ந்தோம். அதேபோல் இனி மேலும் ஒற்றுமையாக வாழ வேண்டும்.

''சகல மக்களும் ஒற்றுமையாக மக்கள் மட்டத்தில் புதிய உலகம் உருவாக்கவேண்டும்.

''சுயராஜ்யம் ஒருவர் மற்றொருவருக்குக் கொடுப்பதல்ல. மக்கள் செயலால், எண்ணத்தால் பெற்றுக் கொள்வது' என்று மகாத்மா காந்தி கூறியுள்வார். இதன்படி நாம் நடந்து ஒற்றுமையை உருவாக்க வேண்டும்''.

முன்னாள் மாநகரசபைஉறுப்பினர் ஜனாப் ஆர்.எம். இமாப் பேசுகையில், ''தலைவர்கள் எடுத்துவரும் முயற்சி வெற்றி பெறவேண்டுமென்றும், தமிழ் பேசும் மக்கள் உரிமைகளைப் பெற்று வாழ தலைவர்கள் எடுத்த நடவடிக்கைகள் பயனளிக்கவேண்டுமென்றும்'' கூறினார்.

பத்தாண்டு நினைவு குழுச் செயலாளர் திரு எம். அலோசியஸ் பேசுகையில், தியாகிகள் தினமாக இதனைக் கருதி அவர்களுக்கு அஞ்சலி செலுத்தவேண்டுமென்றும், சிறுவர்கள் இதனை உணர்ந்து எதிர் காலத்திலும் தியாகிகள் தினத்தைக் கொண்டாடி வரவேண்டும் என்றும் கூறினார்.

சர்வகட்சி மாநாட்டில் ஒரு நல்ல முடிவு ஏற்படவேண்டுமென்றும் அவர் கூறினார்.

தலைவர் திரு.இராஜேந்திரம் பேசுகையில், தியாகிகளின் வரலாறு பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டுமென்றும், அவர்கள் செய்த தியாகம் வீண் போகாது என்றும் கூறினார். (ஸ)

## ஸ்ரீலங்கா சுதந்திர..

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தொடர்ந்து இலங்கை சோனக சங்கமும், முஸ்லிம் லீக்கும் பேரவையிலிருந்து வெளியேறத் தீர்மானித்துள்ளன.

வெளிநாட்டமைச்சர் ஜனாப் ஹமீட்டுடன் தொடர்பு கொண்டு பிரதிநிதி ஒருவரை தெரிவு செய்யுமாறு முஸ்லீம் லீக் ஜனாதிபதிக்கு அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.

### 'அநுரா'வுக்கும் அழைப்பு

எதிர்கட்சித் தலைவர் என்ற முறையில் திரு. அநுரா பண்டாரநாயக்காவையும் மாநாட்டில் கலந்து கொள்ளும்படி அழைப்பு அனுப்பப் பட்டுள்ளது.

சர்வகட்சி மாநாட்டின் செயலாளர் ஈ. எஸ். டயஸ் அபயசிங்கா இந்த அழைப்பை அனுப்பி வைத்துள்ளார்.

எதிர்க்கட்சியின் தலைவர் என்ற முறையில் மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு ஜனாதிபதி கேட்டுக்கொண்டதன் பேரில் இவ் அழைப்பு அனுப்பப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அழைப்பை ஏற்றுக்கொண்டு திரு. அநுரா மாநாட்டில் கலந்துகொள்வதற்கு நேற்றுக் கூடிய கட்சியின் மத்திய குழு அனுமதி வழங்கியுள்ளது.

### மாநாட்டில் கலந்துகொண்ட பிரதிநிதிகள்

அரசாங்கக்குழு: அமைச்சர்கள் லலித் அத்துலத் முதலி, கே டபிள்யூ தேவநாயகம், எம். எச். முகமது.

ஐ. தே. க: பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா, டாக்டர் எம். ஸி. எம்.கலீல், திருமதி புலேந்திரன்.

கூட்டணி: திரு. ஏ. அமிர்தலிங்கம், எம். சிவசிதம்பரம், ஆர். சம்பந்தன்

தமிழரசு: பி. கணேசலிங்கம், பி. எஸ். சூசைதாசன், எம. ஏ எல். மஃரூப்

தமிழ்க் காங்கிரஸ்: திரு. குமார் பொன்னம்பலம், திரு. மோதிலால் நேரு, திரு. ரி. மகேந்திராசா

கம்யூனிஸ்ட்: திரு. பீட்டர் கெனமன், திரு. கே. பி. டி. சில்வா, திரு. சரத் முத்தெட்டுவேகம

சமசமாஜ கட்சி; டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா, பெர்னார்ட் சொய்சா, எஸ். செந்தில்நாதன்

இ. தொ. கா: அமைச்சர் எஸ். தொண்டமான், எம். எஸ். செல்லச்சாமி, ஜெயா பெரிசுந்தரம்

ஜ தொ. கா: ஜனாப் ஏ. அசீஸ், எஸ்.ஆர். ஏ. சவரிமுத்து ஜினதாச ஜெயசிங்க

இன்றைய மாநாட்டில் மகாசங்க, சிங்கள சங்க, முஸ்லிம் பிரதிநிதிகளும் கலந்து கொள்கின்றனர். (கு)

### கல்லூரி அதிபர் மரணம்

(யாழ்ப்பாணம்)

கல்லூரி அதிபர் ஒருவர் பலத்த காயத்துடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்.

கரவெட்டி ஞானசாரியார் கல்லூரி அதிபர் வி. கே. நடராசா காயங்களுடன் நேற்று முன்தினம் மாலை அனுமதிக்கப்பட்டு நேற்று அதிகாலை மரணமானார்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 86-ம் இலக்க அச்சகத்தில் 1984-ம் ஆண்டு ஜனவரி மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது; Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu- P. O.Box: 49, Telephone: 22389 — 24126.